# யாழ் தினக்குரல்
தினக்குரல் THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 274 திங்கட்கிழமை 13 டிசம்பர் Monday 13th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## இலங்கை - போலந்து நேரடி விமான சேவை

இலங்கை மற்றும் போலந்துக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் முழுமையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் நோக்கில் அரசியல், வர்த்தகம், முதலீடு, சுற்றுலா உறவுகள் மற்றும் மக்களுக்கிடையேயான தொடர்புகளை பக்கம் 02

## இலங்கையில் கேபிள் கார் திட்ட ஒப்பந்தம்

நுவரெலியா பிரதேசத்தில் கேபிள் கார் திட்டத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் அரசாங்கம் சுவீடன் நாட்டு நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ளது.

2 கட்டங்களைக் கொண்ட கேபிள் கார் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் பக்கம் 02

# சமஷ்டி முறையே இறுதித் தீர்வாகும்

## அதுவரை 13 ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் -தமிழ், முஸ்லிம் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தல்-



க.பிரசன்னா

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டிமுறையிலான தீர்வே நிரந்தரமானது என்ற தமது நிலைப்பாட்டை மீண்டும் திட்டவட்டமாக தமிழ் அரசியல் தரப்பு வலிறுத்தியுள்ளது.

அதுவரை இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிரந்தரமான தீர்வு கிடைக்கும் வரை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமெனவும் பக்கம் 02

## -நாட்டில் டொலர் இல்லை-
## உணவுப் பொருள்களுடன் கொள்கலன்கள் தேக்கம்

சுமார் 1500 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட் கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க முடியாமல் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக பணம் செலுத்தி அவற்றை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவுள்ளதாக பக்கம் 02

## -நாட்டை கடன் பொறியில் தள்ளிய-
## பொறுப்பில் இருந்து மகிந்த ஒருபோதும் விலக முடியாது




நாடு தற்போது சிக்கியுள்ள கடன் பொறியில் நாட்டை தள்ளிவிட்டவர் மகிந்த ராஜபக்ச எனவும் அதற்கான பொறுப்பில் இருந்து அவர் விலகிவிட முடியாது எனவும் ஐக்கிய மக்கள்சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பக்கம் 02


## இந்து சமுத்திர பிராந்திய சவால்களை சமாளிப்பதில் புதுடில்லி தீவிரம்

இந்துசமுத்திர பிராந்தியத்தில் எழும் சவால்களை சமாளித்து, அவற்றை முறியடிப்பதில் இந்திய மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்திய பெருங்கடல் பிராந்தியம் 24 நாடுகளை உள்ளடக்கியது. உலக கடல் பரப்பில் மூன்றில் ஒரு பங்கை, இந்திய பெருங்கடல் கொண்டுள்ளது. இந்த கடல் பரப்பு 7,517 கி.மீ., நீளம், ஒன்பது கடலோர நாடுகள், 140 கோடிதொன் சரக்குகளை கையாளும் துறைமுகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஏராளமான சவால்களை இந்த கடல் பிராந்தியம் சந்தித்து வருகிறது. கடற்கொள்ளையர்களின் அட்டகாசம், ஆயுத கடத்தல், சட்ட விரோத குடியேற்றம், போதைப் பொருள் கடத்தல், சுற்றுச்சூழல் பேரிடர்கள் போன்றவற்றால் இந்தியா உட்பட 12 நாடுகள் பாதிக்கப்படுகின்றன. இந்திய பெருங்கடல் பகுதியில் தென் சீன கடல், மலக்கா கணவாய் ஆகியவற்றில் சீனாவின் கடற்படை நடவடிக்கைகள் அதிகரித்து பக்கம் 02

## ஒமிக்ரோன் கொரோனா ஆய்வில் புதிய தகவல்




கடந்த நவம்பர் மாத இறுதியில், தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் கொரோனா தொற்று தற்போது உலகெங்கும் மிக வேகமாகப் பரவியுள்ளது. உருமாறிய ஒமிக்ரோன் கொரோனா குறித்து உலகின் பல்வேறு விஞ்ஞானிகளும் தீவிரமாக ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

ஒமிக்ரோனுக்கு எதிராக தங்களின் தடுப்பூசி எப்படி வேலை செய்கிறது என்பதைக் கண்டறிய ஃபைசர் நிறுவனம் ஆய்வு நடத்திவருகிறது. இந்நிலையில், சீனாவில் முதலில் கண்டறியப்பட்ட கொ ரோனாவை ஒப்பிடுகையில் ஒமிக்ரோனுக்கு எதிரான தடுப்பூசியின் செயல்திறன் 25 மடங்கு குறைவு என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பக்கம் 02

## -மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக-
## ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ரோகினி மாரசிங்க ?

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கான ஜனாதிபதியின் நியமனத்தை பாராளுமன்ற பேரவை கடந்த வெள்ளிக்கிழமை அங்கீகரித்திருக்கிறது

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினால்அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரோஹினி பெரேரா மாரசிங்கவை பாராளுமன்ற பேரவை அங்கீகரித்திருப்பதாக ஜனாதிபதி செயலக பணிப்பாளர் நாயகம் (சட்டம்) ஹரிகுப்த ரோஹணதீர உறுதிப்படுத்தியதாக ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது. பக்கம் 02

## தொடர்ச்சியாக எரிவாயு கசிவு சம்பவங்கள்

க.பிரசன்னா

நாட்டில் தொடர்ச்சியாக எரிவாயு கசிவினால் விபத்து சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் எரிவாயு சிலிண்டர்களில் உள்ள பாகங்களை திருத்துவதற்கு எந்தவொரு நிறுவனமும் நடவடிக்கை எடுக்கவில்லையென நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் எரிவாயு கசிவினால் பதிவான விபத்து சம்பவங்களினால் ஏற்பட்ட பக்கம் 02


## மதத்தலைவர்கள் அரசியலிலிருந்து முழுமையாக விலகியிருக்கவேண்டும்

### -மீண்டும் வலியுறுத்துகிறார் கர்தினால் மல்கம் ரஞ்சித்-

க.பிரசன்னா

மதத் தலைவர்கள் அரசியல் கட்சித் தலைவர்களாக இருக்க முடியாது. உண்மையில் அரசியலில் இருந்து முற்றாக விலகியிருக்க வேண்டும் எனவும் மதத் தலைமைகள் எப்போதும் சுயாதீனமாக இருக்க வேண்டும் எனவும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பெ ல்லான பிரதேசத்திலுள்ள தேவாலயமொன்றில் ஆராதனையில் கலந்துகொண்ட போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், மதம் அரசியலுக்கு அடிபணிந்தால் அது மதத் துரோகம். இது சமூகத்தின் பார்வையில் தமது மதத்திற்கு செய்யும் துரோகம். எந்தவொரு ஆதாயத்திற்காகவும் அரசியல் கட்சித் தலைவர்களிடம் மதத் தலைவர்கள் பணிந்துவிடக்கூடாது.



மதத் தலைவர்கள் அரசியல் கட்சித் தலைவர்களாக இருக்க முடியாது. உண்மையில் அரசியலில் இருந்து முற்றாக விலகியிருக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் மதத்திற்கு பக்கம் 06

## மீண்டும் நாடாளுமன்றம் செல்லும் நோக்கம் இல்லை; நீதியமைச்சர்



நாடாளுமன்றத்திற்கு மீண்டும் ஒரு முறை செல்லும் நோக்கம் தனக்கு இல்லை எனவும் சட்டத்துறை தொழிலுக்குதான் மீண்டும் திரும்ப உள்ளதாகவும் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி பிரேமரத்ன ஜயசிங்க எழுதியுள்ள குற்றவியல் சட்டம் தொடர்பான நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நீதியமைச்சர் இதனை கூறியுள்ளார். எவர் குற்றம் சுமத்தினாலும் இலங்கை நீதித்துறை சுயாதீனமானது. நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்கும் பொறுப்பை உச்சபட்சமாக நிறைவேற்றி வருகிறேன். நாடு என்ற வகையில் இது குறித்து அனைவரும் மகிழ்ச்சியடைய முடியும். நீதித்துறை பக்கம் 06

## கொரோனா தொற்று மேலும் 19 பேர் பலி

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளா ன மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தவர்கள் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,614 ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து மேலும் 425 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 545,051 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 572,188 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




## இலங்கை – போலந்து ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கும் ஒரே நேரத்தில் அங்கீகாரம் பெற்ற போலந்து தூதுவர் அடம் புராகோவ்ஸ்கி, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின்போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டுடன் 65 வருடங்கள் நிறைவடையுள்ளமையை நினைவு கூர்ந்த அமைச்சர், போலந்துடனான பன்முகப் பங்காளித்துவத்தை மேலும் முன்னேற்றுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தினார்.இதன்போது இரு நாடுகளினதும் வணிக சமூகங்களுக்கு இடையேயான வழக்கமான தொடர்புகளின் அவசியம் குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டது.

## பொறுப்பில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். கடந்த 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச இந்த நாட்டின் ஜனாதிபதியாக பதவிக்கு வந்திருக்காவிட்டால், தற்போதும் நாட்டிற்குள் வழமையான பொருளாதாரத்தை முன்னெடுத்து செல்ல கூடியதாக இருந்திருக்கும்.

2005 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த கடன் 2 ஆயிரத்து 222 பில்லியன் ரூபாய். இந்த கடனுடன் வணிக கடன்களை பெற்று நாட்டை பொருளாதார ரீதியாக அதள பாதாளத்திற்கு கொண்டு செல்ல ஆரம்பித்தவர் மகிந்த ராஜபக்ச.

அவரது சகாக்கள் தற்போது என்ன கூறினாலும் அவரால் இதில் இருந்து விலகிச் செல்ல முடியாது. நாட்டின் கடன் பொறியில் தள்ளியமைக்கான பொறுப்பை மகிந்த ராஜபக்ச ஏற்றே ஆக வேண்டும்.

மகிந்த ராஜபக்ச பெற்றுக் கொண்ட கடன்களை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களில் பலன்கள் கிடைக்கவில்லை. தாமரை கோபுரம், சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானம். அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற வருமானம் பெற முடியாத திட்டங்களை உருவாக்கி நாட்டை கடனாளியாக்கினார்.

எவ்வித வருமானமும் கிடைக்காத திட்டங்கள் ஊடாக அரசியல் திட்டங்களே முன்னெடுக்கப்பட்டதால், நாடு தற்போது கடனில் சிக்கியுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதார வீழ்ச்சி எவராலும் தீர்வை தேட முடியாதுள்ளது. கோட்டாபய ராஜபக்ச எந்தளவுக்கு முயற்சித்தாலும் அதனை செய்ய முடியாது எனவும் ஹேசா விதானகே குறிப்பிட்டுள்ளார்.

## உணவுப் பொருட்களுடன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கொள்கலன்களில் உருளைக்கிழங்கு, கடலை, செத்தல் மிளகாய், பருப்பு மற்றும் மசாலா உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருட்கள் இருப்பதாகவும், அவற்றின் மதிப்பு 150 மில்லியன் டொலர் முதல் 200 மில்லியன் டொலர் வரை இருக்கும் என்றும் கூறப் படுகிறது.

## இலங்கையில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நானுஓயாவிலிருந்து நுவரெலியா வரை 4 கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் இந்த கேபிள் கார் பாதையானது சுவீடன் வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் முழுமையாக நிதியளிக்கப்பட்டுள்ளது.

55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 30 ஆண்டு குத்தகைக்கு இந்த திட்டம் உருவாக்கப்படும். இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சகத்தின் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

## ஒமிக்ரோன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் 2 தவணை தடுப்பூசி செலுத்தி கொண்ட பிறகு, கூடுதலாக பூஸ்டர் டோஸ் எடுத்துக் கொள்ளும் போது அவர்களின் தடுப்பாற்றல் அதிகரிக்க செய்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதாவது 2 தவணை தடுப்பூசி என்பது ஒமிக்ரோனுக்கு எதிராகப் போராட பொதுவான எதிர்ப்பு ஆற்றலை அளிக்கவில்லை என்றும் பூஸ்டர் டோஸ் கட்டாயம் போட வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து பைசர் நிறுவனத்தின் தலைமை அறிவியல் அலுவலர் மைக்கேல் டோல்ஸ்டன் கூறுகையில், ஒமிக்ரோனுக்கு எதிராகப் போராட 3 டோஸ் தடுப்பூசி தேவைப்படும். 3ஆம் டோஸ் போடுவதன் மூலம் உடலில் பிறபொருளெதிரிகள் ஜஅண்டிபொடிகள்ஸ அதிகரிக்கும். இது வைரசுக்கு எதிராக சில மாதங்கள் வரை குறைந்தபட்சம் தாக்குப்பிடிக்கும். இந்த இடைவெளியில் புதிய தடுப்பூசி தேவைப்பட்டால் அதை உருவாக்கிக் கொள்ள முடியும் என்றார். ஒமிக்ரோன் ஒப்பீட்டளவில் லேசான பாதிப்புகளையே ஏற்படுத்துவதாக தற்போது வரை வெளியான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதேபோல வேறு ஆய்வாளர்கள் நடத்திய ஆய்விலும் தடுப்பூசியின் தடுப்பாற்றல் 40 சதவிகிதம் வரை குறையலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

## சமஷ்டி முறையே இறுதித் தீர்வாகும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தியுரைத்திருக்கிறது.

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் இடம்பெற்ற தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களின் ஊடக சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு:

**இரா.சம்பந்தன்**

நாட்டில் தற்போது புதிய அரசியல் சாசனமொன்று உருவாகுமென்ற பேச்சு எழுந்துள்ளது. அதனை நாங்கள் அவதானித்து வருகின்றோம். அதேவேளை ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கருத்தும் முன்னிலை பெற்றுள்ளது. வடக்கில் சட்டவிரோத குடியேற்றங்கள், தமிழ் மக்கள் தொடர்ந்தும் நாட்டைவிட்டு வெளியேறுவதும் அகதிகளாக வெளிநாடுகளுக்கு செல்வதும் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவற்ற நிலையில் இருக்கின்றது. அவர்களின் நோக்கத்தை அறியமுடியாதுள்ளது.

அரசாங்கத்தின் போக்கு, கடும் போக்காக மாறுமென்று சந்தேகிக்க போதிய இடமுண்டு. இந்த சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் சார்பாக தமிழ்பேசும் கட்சிகள் ஒன்று கூடி மக்களுடைய தேவைகள் தொடர்பில் ஆராய்ந்து பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆலோசித்திருந்தோம்.

எமது தாய் நாடான இந்தியாவின் உதவியுடன் 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதுடன் அதற்கு முன்பதாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. அதை நிறைவேற்றுவதற்கு பதிலாக சில அதிகாரங்களை அதிலிருந்து நீக்குவதற்கும் அதனை மத்திய அரசாங்கம் கையாளுவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு இந்திய உயரதிகாரிகள் கூறும் போதும் அவை செயற்படுத்தவில்லை.

இதனால் தமிழ்பேசும் மக்கள் சார்பாக ஒற்றுமையாக ஒருமித்த கருத்தினை முன்வைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்காகவே இந்த ஒன்றுகூடல் இடம்பெற்றிருந்தது என தெரிவித்திருந்தார்.

**சி.வி.விக்னேஸ்வரன்**

தமிழ் பேசும் மக்களுக்கு வெவ்வேறு பிரச்சினைகள் காணப்பட்டாலும் எங்களை ஒன்றாக இணைக்கும் நடவடிக்கையினை 13 ஆவது திருத்தம் மேற்கொள்கிறது. அவற்றை அமுல்படுத்தாவிட்டால் சகலரும் பாதிக்கப்படுவோம். புதிய அரசியல் யாப்பில் 13 ஆவது திருத்தத்தை உள்ளடக்கினாலும் அதற்கு மேலதிகமாக சில விடயங்களை உள்ளடக்கினாலும் இந்தியாவின் உள்ளீடு இல்லாமல் போய்விடும். தற்போதைய 13 ஆவது திருத்தம் இருப்பதாலே இந்தியா எம்மீது கரிசனை கொள்கின்றது. உடன்படிக்கையினை கைச்சாத்திட்டுவிட்டு இலங்கை அதை புறக்கணிப்பதாக இந்திய தரப்பிலிருந்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது அரசியலமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறே நாங்கள் கோருகின்றோம். அது நிரந்தர அரசியல் தீர்வுக்கு பதிலான ஒன்று அல்ல. சமஷ்டி அல்லது கூட்டு சமஸ்டியே எங்களுடைய நிரந்தர தீர்வாக இருக்கின்றது. நிரந்தர தீர்வு கிடைக்கும் வரையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

காணி, வாழ்வாதாரம் என்பன பறிபோகும் நிலையில் தற்போதுள்ள சட்டங்களை அமுல்படுத்தி அவற்றை பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. சமஸ்டி தீர்வை நாங்கள் ஒருபோதும் கைவிடவில்லை. அதனை பெற்றே தீருவோம். கடந்த சில வருடங்களாக மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் மத்திய அரசாங்கம் தமக்கேற்ற வகையில் அதிகாரங்களை பிரயோகிக்கின்றது. இவற்றை நிறுத்த எங்களுக்கு அதிகாரம் தேவை. தற்போது இருக்கும் ஒரே பாதுகாப்பு 13 ஆவது திருத்தச் சட்டமாகும்.

மாகாண சபைகளை வெள்ளை யானையென தெற்கில் கருத்து வெளியிடுகின்றனர். சிறுபான்மை மக்களுக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் நன்மை தரும். இவை தொடர்பான புதிய ஆவணம் கைச்சாத்திடப்பட்டு இந்தியாவிடம் கையளிக்கப்படும் என தெரிவித்தார்.

**ரவூப் ஹக்கீம்**

சிறுபான்மையினருக்கு அதிகாரப் பகிர்வினை வழங்குகின்ற ஏற்பாடுகளில் அரசாங்கம் இழுபறியுடன் செயற்படுகின்றது. மாகாணசபைகள் இயங்காமல் இருக்கின்ற நிலையை வாய்ப்பாக்கி மத்திய அரசாங்கம் ஜனாதிபதி செயலணி என்ற போர்வையில் சிறுபான்மை பிரதிநிதித்துவம் இல்லாமல் கொண்டுசெல்ல எத்தனிக்கின்றது.

இவற்றை முறியடிப்பதற்கு தற்போதைய அதிகாரப் பகிர்வுகள் அமுல்படுத்தப்பட வேண்டும். தேர்தலில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை சாட்டாக கொண்டு தேர்தலை இழுத்தடிப்பு செய்வதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. பழைய தேர்தல் முறைமையின் கீழ் தேர்தலை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஆளுநர்களின் தலைமையில் அரசாங்கத்தினால் சிறுபான்மையினருக்கு எதிரான மறைமுக நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியாவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றை வலியுறுத்துவதற்கு நாங்கள் ஒன்றாக இணைந்துள்ளோம் என்றார்.

**மனோ கணேசன்**

13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் பேசும் மக்களின் இறுதி இலக்கு அல்ல. 13 க்கும் அப்பால் சென்று வழங்கப்படும் தீர்வை நாங்கள் எதிர்ப்பதாக பரிமாறப்படும் கருத்தினை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். 13 ஆவது திருத்தம் புதிய கோரிக்கையல்ல. அது இலங்கை அரசியலமைக்குள் உள்ள சட்டம். எனவே இந்த சட்டத்தை ஜனாதிபதி அமுல்படுத்தி காட்டுமாறு சவால் விடுக்கின்றோம். இது தமிழ் மக்களுக்கான ஒரேயொரு அதிகார பரவலாக்கல் சட்டமாக காணப்படுகின்றது. யுத்தத்தின் போது உலக நாடுகள் அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்கியிருந்தன. எனவே இந்திய அரசாங்கத்துக்கும் உலக நாடுகளுக்கும் பாரிய கடப்பாடு இருக்கின்றது. 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த அழுத்தம் வழங்க வேண்டும்.

13 ஆவது திருத்தம் மட்டுமல்லாது மொழி உரிமை பற்றிய 16 ஆவது திருத்தம் தொடர்பிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் கைதுசெய்யப்பட்டு பலர் இன்னும் சிறைகளில் இருக்கின்றனர். அவர்களுக்கு கட்டளையிட்டவர்கள் தற்போது அரசாங்கத்தின் அமைச்சர்களாக இருக்கின்றனர். இளைஞர்களின் கடத்தலுடன் தொடர்புடைய நபரின் வழக்கு சட்டமா அதிபரினால் வாபஸ் பெறப்படும் நிலையில் மிருசுவில் கொலையுடன் தொடர்புடையவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் நிலையில் ஏன் இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க முடியவில்லை.

பாகிஸ்தான் சம்பவம் தொடர்பில் நியாயம் கேட்பவர்கள் இலங்கையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் மௌனம் சாதிக்கின்றனர். எங்களுடைய ஒற்றுமை சிங்களவருக்கு எதிரானதல்ல. ஒரே நாட்டினை நாங்கள் விரும்புகின்றோம். ஆனால் ஒரே நாட்டில் அடிமையாக இருக்க முடியாது.

சமவுரிமையுடன் வாழவே விரும்புகின்றோம். எதிர்வரும் 21 ஆம் திகதி இவை தொடர்பான ஆவணம் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்படும். எதிர்காலத்தில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

## தொடர்ச்சியாக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நஷ்டம் தொடர்பில் இவ்வாரம் எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும். அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. விபத்து சம்பவங்கள் நிறைவு பெற்ற பின்னரும் எரிவாயு சிலிண்டர்களில் உள்ள பாகங்களை திருத்துவதற்கு எந்தவொரு நிறுவனமும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிவாயு விபத்துக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இவ்வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. எரிவாயு விபத்துக்கள் தொடர்பான விசாரணைகள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அறிக்கை தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தில் இருப்பதாகவும் அக்குழுவின் தலைவர் பேராசிரியர் சாந்த வல்பொல தெரிவித்துள்ளார். நாட்டில் அண்மைக்காலங்களாக இடம்பெறுவரும் வெடிப்புச் சம்பவங்களின் பின்னர் எரிவாயு விநியோகம் இடைநிறுத்தப்பட்டு புதிய சிலிண்டர்களின் விநியோகம் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. எனினும் புதிய எரிவாயு சிலிண்டர்களும் வெடிப்புச் சம்பவங்களுக்கு உள்ளாவதாக தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## இந்து சமுத்திர ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன. இதையொட்டி, இந்திய பெருங்கடலில் கண்காணிப்பு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட நாடுகள் தீவிரப்படுத்தியுள்ளன.சீனா - பாக்., பொருளாதார வழித்தடமும் இந்த பிராந்தியத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது. இதுவரை வங்கதேசம், இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இல்லை. ஆனால் அந்த நாட்டிற்கு நீர்மூழ்கி கப்பல்களை சீனா வழங்குவதால், இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் அதன் ஆதிக்கத்தை அதிகரிக்கச் செய்யும் என்ற அச்சம் உள்ளது.

ஏற்கனவே இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் ஆளுகையில் உள்ளது.இத்தகைய சூழலில் கடந்த ஆண்டு இந்தியாவும், இலங்கையும் இணைந்து இந்திய பெருங்கடல் பகுதியில் கடற்படை பயிற்சி நடத்தின .இரு நாடுகள் இணைந்து உளவு தகவல்களை பரிமாறிக் கொள்வதால், இந்திய பெருங்கடல் பகுதியில் போதை மருந்து, ஆயுதக் கடத்தல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகள் கட்டுப்படுத்த முடியும். சமீப காலமாக இந்திய கடற்படை சர்ச்சைக்குரிய கடல் பகுதிகளில் தயார் நிலையில் கப்பல்கள், விமானம் தாங்கி கப்பல்கள் ஆகியவற்றின் ரோந்துக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த வகையில் ஏடன் வளைகுடா, வடக்கு அரபிக் கடல், லட்சத் தீவு, மாலை தீவு, செஷல்ஸ், மொரீஷியஸ், வடக்கு வங்காள விரிகுடா, அந்தமான், நிகோபார், மலக்கா கணவாய் ஆகிய ஏழு மண்டலங்களில் ஆண்டு முழுதும் 15 போர்க் கப்பல்கள்மற்றும் விமானங்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன. இந்திய கடற்படையும், கடலோர காவல் படையும் இணைந்து பல்வேறு கூட்டு பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

## ஓய்வுபெற்ற ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற பேரவை உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹாஷிம் ஜனாதிபதியின் நியமனத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளார்.

நவம்பரில் உடல்நலம் தொடர்பான காரணங்களால் முன்னாள் தலைவர் டாக்டர் ஜகத் பாலசூரிய பதவி விலகியதைத் தொடர்ந்துஇலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவி வெற்றிடமாகவிருந்தது. இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த சர்வதேச கண்காணிப்புக்கு மத்தியில், வேறொருவரை நியமிப்பதில் ஏற்பட்ட தாமதம், பலரிடமிருந்து விமர்சனத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு சட்டத்தரணிகளான கெஹான் குணதிலக மற்றும் நிமால்கா பெர்னாண்டோ ஆகியோரை எதிர்க்கட்சி முன்மொழிந்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்திருந்தன .

இதற்கிடையில், வெற்றிடமாகவுள்ள ஆணையாளர் பதவிக்கு பௌத்த பிக்கு ஒருவர் பரிந்துரைக்கப்படலாமென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

மனித உரிமைகள்ஆணைக்குழுவுக்கு அனுபவமும் நம்பகத்தன்மையும் உள்ளவர்கள் நியமிக்கப்பட வேண்டும். சட்ட மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அனுபவமுள்ள பல தகுதி வாய்ந்த மற்றும் நம்பகமான நபர்கள் நியமிக்கப்படலாம். ஆணைக்குழுவில் ஒரு மதத் தலைவர் நியமிக்கப்பட்டால், அது இந்த நிறுவனத்தை இழிவுபடுத்தக் கூடும், என்று தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் இருக்க விரும்பும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்., அத்தகைய நடவடிக்கை ஒரு முக்கியமான காலகட்டத்தில் அமைப்பின் சர்வதேச நிலைப்பாட்டையும் பாதிக்கலாம் என்றுஅவர் கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் பற்றிய கவலைகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் எதிர்க்கட்சி கடந்த நவம்பர் மாதம் எழுப்பியிருந்தது

ஐக்கியமக்கள் சக்தி யும் ஏனைய எதிர்க்கட்சிகளும் மனிதஉரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழு போன்ற முக்கியமான நிறுவனங்களுக்கு நியமனம் செய்வதற்கு முன், நம்பகத்தன்மையின் முக்கியத்துவம் மற்றும் கலந்துரையாடல்களின் அவசியம் குறித்து பிரதமரிடம் தெரிவித்திருந்தன. ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு சமூகத்தால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவரை நியமிப்பது குறித்து பரிசீலிக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஆரம்பத்திலிருந்து மனித உரிமைகள் மற்றும் சட்டத் துறைகளில் தங்களை தனித்துவப் படுத்திக் கொண்ட ஆட்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்து வருகின்றனர் 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர், ஆணைக்குழுவின் தலைவர் பதவியானது ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் அல்லது இலங்கையிலும் சர்வதேச அளவிலும் மனித உரிமைகள் தொடர்பான தொழில்சார் மற்றும் கல்விப் பணிகளுக்காகப் புகழ் பெற்றவர்களிடமே இருந்துவந்துள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நவம்பர் 15 திகதியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

# யுகதனவி மின்நிலைய பங்கு விற்பனை ஒப்பந்தத்தை இரத்து செய்யமுடியாது

**- அமைச்சர் பந்துல குணவர்தன-**

க.பிரசன்னா



கெரவலப்பிட்டி யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியமை தொடர்பான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய முடியாதென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தொடர்பான ஒப்பந்தம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இரத்துச் செய்யப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்குத் வகையில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சிகளினால் இவ்வாறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் ஆட்சிக்கு வந்த பின்னர் அரசாங்கங்கள் விரும்பியவாறு சட்டரீதியான ஒப்பந்தங்களை இரத்து செய்ய முடியாது.

கெரவலப்பிட்டியவில் உள்ள யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை கையளிப்பதற்காக அமெரிக்க நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்காததால், இந்த வார சந்திப்பின் போது யுகதனவி ஒப்பந்தம் குறித்து பரிசீலிக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் குறித்து மறைக்க எதுவும் இல்லை. அமைச்சரவைக் கூட்டத்திற்கு பிறகு இது பகிரங்கப்படுத்தப்படும். அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கையை தாங்கள் கடுமையாக எதிர்த்த போதிலும் ஆட்சிக்கு வந்த பின்னர் அதனை இரத்து செய்யவோ அல்லது திருத்தவோ முடியாது.

எனவே எதிர்கால அரசாங்கத்தினால் யுகதனவி உடன்படிக்கையையும் இரத்து செய்ய முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உலகில் பாரிய நீலக்கல் இலங்கையில் கண்டுபிடிப்பு



உலகின் மிகப்பெரிய நீலக்கல் எனக் கூறப்படும் மாணிக்க கல் பாறையொன்று இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மாணிக்க கல் பாறைக்கு ஆசியாவின் இளவரசி (Queen of Asia ) என பெயரிடப்பட்டுள்ளது. இந்த கல் 310 கிலோ எடையுடையதுடன் 1,550,000 கெரட்டாகும். என தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை தெரிவிக்கின்றது.

இந்த இரத்தினக்கல் இரத்தினபுரி - பட்டுகெதர பகுதியிலேயே இந்த கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## நித்திரையில் இருந்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்து திருட்டு

அம்பாறை கோளாவில் பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றில் நித்திரையில் இருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் 13 இலட்சம் ரூபா பெறுமதியான 10 அரை பவுண் நிறை கொண்ட தாலிக் கொடியை கொள்ளையர் அறுத்து எடுத்துச் சென்ற சம்பவம் சனிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக கோளாவில் பொலிசார் தெரிவித்தனர்.

ஆலையடிவேம்பு குருக்கல் வீதியில் உள்ள வீடு ஒன்றில் சம்பவதினமான சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் வீட்டில் அனைவரும் நித்திரையில் இருந்த வேளை வீட்டின் யன்னல் கம்பியை கழற்றி வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர் நித்திரையில் இருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த 10 அரை பவுண் கொண்ட தாலிக்கொடியை வெட்டி எடுத்துக் கொண்டு தப்பிஓடியுள்ளான்.

இதனையடுத்து பொலிசாருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து பொலிசார் கொள்ளைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த 3 தினங்களுக்கு முன்னர் வாச்சிக்குடா பிரதேசத்தில் இதே பாணியில் ஒரு பெண்ணின் தாலிக்கோடியை கொள்ளையர்கள் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

## மக்களுக்கு ஆரோக்கியமான உணவை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம்

**- நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்-**

க.பிரசன்னா



இலங்கை மக்களுக்கு ஆரோக்கியமானதும் நச்சுத்தன்மையற்றதுமான உணவுப் பயிர்களை வழங்குவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகுமென அமைச்சர் நாமல் ராஜபக்ச நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உரத் தட்டுப்பாட்டைக் குறைக்க ஜனாதிபதியும் விவசாய அமைச்சரும் சில தீர்மானங்களை மேற்கொண்டுள்ளனர். இலங்கையில் பாரிய ஏற்றுமதி வருமானத்தை ஈட்டும் விவசாயத் துறையை உருவாக்குவதற்கு முயற்சிமேற்கொள்ளப்படுகிறது

நாட்டில் ஆரோக்கியமான சமுதாயம் என்ற அரசாங்கத்தின் தொலைநோக்கு கொள்கையை நிறைவேற்றுவதற்காக இயற்கை விவசாயம் தொடர்பில் விசேட செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை மக்களுக்கு ஆரோக்கியமான மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவுப்பொருட்களை வழங்குவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதேவேளை நாட்டில் எரிவாயு கலவை மாற்றப்பட்டிருக்குமாயின் அவை தொடர்பில் எரிவாயு நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டும். எரிவாயு வெடிப்புச் சம்பவங்களானது தேசிய பாதுகாப்பைஅச்சுறுத்தும் விடயம் என்பதால், குறித்த எரிவாயுவை இறக்குமதி செய்து விநியோகித்தவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும்

நாட்டின் முன்னேற்றத்திற்கு குந்தகம் விளைவிக்க ஒரு குறிப்பிட்ட குழு முயற்சிகளை மேற்கொண்டால், அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழகங்கள் ஜனவரியில் திறக்கப்படும்

நாட்டில் புதிய கொரோனா வைரஸ் பிறழ்வினால் பாதிப்பு ஏற்படாவிட்டால், அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர் வரும் ஜனவரி மாதமளவில் அழைக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தற்போது 25 வீத மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சில பல்கலைக்கழக விடுதிகளில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியுள்ள காரணத்தினால், அவர்களை மீளவும் அழைத்தால் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடையே கொவிட் தொற்று பரவும் அபாயம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.





# தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும்

**-மலையக தொழிலாளர்கள் போராட்டம்-**

தோட்ட நிர்வாகம் மற்றும் கம்பனிகளுக்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் என வலியுறுத்தி, தோட்டத் தொழிலாளர்களால் லிந்துலை நகரில் நேற்று போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

லிந்துலை நகரில் நடைபெற்ற இப்போராட்டத்தில் டயகம, தலவாக்கலை, கொட்டகலை, லிந்துலை மற்றும் ஏனைய சில தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இ.தொ.காவின் பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சக்திவேல், கொட்டகலை, தலவாக்கலை பிரதேச சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட இ.தொ.காவின் பிரதிநிதிகளும் இப்போராட்டத்தில் பங்கேற்று, தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் பங்கேற்ற மக்கள், தோட்ட நிர்வாகம் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கெடுபிடிகளை கண்டித்ததுடன், தமக்கு உரிய வகையில் சம்பள கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

கொழுந்தின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது, அரை நாள் பெயர்தான் விழுகின்றது, ஆயிரம் ரூபா கிடைத்தும் பயன் இல்லை என தொழிலாளர்கள் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தினர்.

கூட்டு ஒப்பந்தம் இல்லாததால்தான் தமக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய மக்கள், அந்த ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

## கைக்குண்டு வெடித்ததில் திருமலைச் சிறுவன் பலி

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைக்குண்டு வெடித்ததில் சிறுவன் ஒருவர் பலியாகியுள்ளான்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

தோப்பூர் செல்வ நகர் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

ஆட்டுக்கு இலை குழைகள் வெட்டச் சென்ற சிறுவனே இவ்வாறு பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## எரிவாயு அடுப்பு வெடித்து சிகிச்சை பெற்று வந்த பெண் உயிரிழப்பு



சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு விபத்துக்குள்ளானதில் தீக்காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வில்கமுவ, தேவகிரிய, பிதுருவெல்ல பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கண்டி தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர உறுதிப்படுத்தியுள்ளார்.

குண்டசாலை நாட்டரன்பொத பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கடந்த முதலாம் திகதி எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

குறித்த பெண் குண்டசாலை பகுதியில் குடும்பத்துடன் வாடகை வீடொன்றில் வசித்து வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ தினத்தன்று காலை குறித்த பெண் சமைக்க தயாராகிக் கொண்டிருந்த போது இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்னர் சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 10 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

எரிவாயு விபத்தினால் குறித்த பெண் உயிரிழந்துள்ள போதும் விபத்துக்கான சரியான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை எனவும் பல்லேகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அரச பகுப்பாய்வாளரிடம் இருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## எலுவங்குளம் வாகன விபத்தில் 16 பேர் காயம்

புத்தளம் - எலுவங்குளம் பிரதான வீதியின் வன்னாத்தவில்லு பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் 2 சிறுவர்கள் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளனர்.

எலுவங்குளத்தில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த தனியார் பயணிகள் பஸ் ஒன்று எதிர்த் திசையில் பயணித்தவான் ஒன்றுக்கு இடம்கொடுக்க முற்பட்ட போது வீதியோரத்தில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது இரண்டு சிறுவர்கள் உட்பட 16 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். காயமடைந்தவர்களில் 11 பேர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 5 பேர் வண்ணாத்தவில்லு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பியுள்ளனர்.

இதேவேளை , புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனவும் பொலிஸார் கூறினர்.

அத்துடன், இந்த விபத்தில் வீதியின் அருகில் இருந்த மின் கம்பம் ஒன்றும் முழுமையாக சேதமடைந்து கீழே விழுந்ததமையால் வண்ணாத்தவில்லு பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.

விபத்து சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் வண்ணாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்



வவுனியா-புளியங்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் டிப்பர் வாகனம் துவிச்சக்கரவண்டியில் சென்றவரை மோதி தள்ளியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புளியங்குளம் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் வீதியோரமாக துவிச்சக்கரவண்டியில் சென்றவரை பின்பக்கமாக வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளது. விபத்தில் டிப்பர் வாகனத்தின் கீழ் பகுதியினுள் துவிச்சக்கரவண்டி சிக்குண்டதுடன் துவிச்சக்கரவண்டியின் சாரதி காயங்களுக்குள்ளாகினார்.

இவ் விபத்தில் தொடர்பான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
திங்கட்கிழமை 13 டிசம்பர் 2021 Monday 13th December 2021

## அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துகள் பொதுவான முறைமையாகிவிட்டதா?

வீதி விபத்துகள் எமது முறைமையில் பொதுவானதாகிவிட்டதோவென எண்ணத் தோன்றுகின்றது .இந்தச் சம்பவங்களில் ஆட்கள் காயமடைவது, மரணிப்பது போன்ற செய்திகள் பொதுவானதாகக் கருதப்படுகிறது. வீதிப் போக்குவரத்தை பாதுகாப்பானதாக மாற்றுவதற்கும் வீதி விபத்துகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தடுப்பதற்கும் ஆக்கபூர்வமாக எதுவும் செய்யப்படவில்லையென விசனிக்கும் அளவுக்கு விபத்துக்களும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. இதேவேளை இலங்கையில் மதிப்பிடப்பட்ட வருடாந்த வீதி விபத்து மரணங்கள், அதிக வருமானம் கொண்ட நாடுகளின் சராசரி வீதத்தை விட இரண்டு மடங்கு அதிகமெனவும் உலகில் சிறப்பாக செயற்படும் நாடுகளை விட ஐந்து மடங்கு அதிகம் என்றும் உலக வங்கியின் சமீபத்தைய அறிக்கையொன்று சுட்டிக்காட்டுகிறது.நாட்டின் தரவுகளின் பிரகாரம் வருடாந்தம் சராசரியாக 38,000 விபத்துக்கள் சம்பவிக்கின்றன. இதன் விளைவாக சுமார் 3,000 மரணங்களும் 8,000 கடுமையான காயங்கள் ஏற்படுகின்றன. தெற்காசிய பிராந்தியத்தில் அயல் நாடுகளில் 'மோசமான வீதி இறப்பு விகிதத்தை' இலங்கை கொண்டுள்ளதுடன், அறிவிக்கப்பட்ட இறப்பு விகிதம் (17.4) தெற்காசியாவில் மிக மோசமானதென அந்த அறிக்கை கூறுகிறது.

உண்மையில் வீதி விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைப் பற்றி பேசும்போது, காயமடைந்தவர்களை பற்றி அதிகளவுக்கு கவனிப்பதில்லை . காயமடைவோரில் எத்தனை பேர் மாற்றுத்திறனாளிகள் பட்டியலில் சேர்ந்துள்ளனரென்பது எவருக்கும் தெரியாது.வீதி விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகள் 50% குறைவதால், 24 ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7 முதல் 22% வரை அதிகரிக்குமென பல்வேறு நாடுகளில் உள்ள வீதி விபத்துகள் குறித்த உலக வங்கி ஆய்வு கூறுகிறது.மனித மூலதனம் ஒரு நாட்டின் மொத்தச் செல்வத்தில் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டுள்ளது.இது இயற்கை மூலதனம் மற்றும் உற்பத்தி மூலதனத்தை விட மிக அதிகமாகும் . வீதி விபத்துக்களை, குறிப்பாக உயிரிழக்கும் விபத்துகளைத் தடுப்பதன் மூலம் மனித உயிர்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துகிறது .விபத்து மரணங்களும் காயங்களும் பரும்படி பொருளாதாரத்தில் விளைவுகளைக் கொண்டிருக்கின்றன. மக்கள் தொகையில் 'உழைக்கும் வயதினராக' இருக்கும் இளைஞர்களை பெரும்பாலும் பாதிக்கிறதென வங்கி சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையில் பொருளாதார ரீதியாக உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் பிரிவினர் மத்தியிலான விபத்து மரணங்கள், நோயுற்றவர்களின் தாக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தைக் குறைக்கிறது என்ற யதார்த்தத்தை உலக வங்கியின் அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.இலங்கையைப் பற்றி அந்த அறிக்கை குறிப்பாகக் குறிப்பிடுகையில், வீதி விபத்து மரணம் மற்றும் காயங்களை தடுப்பதில் முதலீடு செய்வது மனித மூலதனத்தின் அதிகரிப்புக்கு பங்களிக்கும். இது நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் ஒட்டுமொத்த செல்வத்திற்கும் பங்களிப்பை வழங்கும். கடந்த தசாப்தத்தில் வறுமையைக் குறைப்பதிலும், செழிப்பை அதிகரிப்பதிலும் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளதென்று தெரிவித்திருந்தது. அதேசமயம் வீதி விபத்துகளால் ஏற்படும் அதிக உயிரிழப்புகளும் காயங்களும் இந்த அனுகூலங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படும் என்று எச்சரித்திருப்பதையும் காணமுடிகிறது.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, 2016 ஆம் ஆண்டில் சம்பவித்திருந்த சுமார் 3,000 வீதி மரணங்களில், பாதசாரிகள் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினராவார். வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபையின் தரவுகள் ஏப்ரல் மற்றும் டிசம்பர் ஆகிய பண்டிகைக்காலங்களில் பெரும்பாலான விபத்துக்கள் ஏற்படுவதை வெளிப்படுத்துகின்றன. அதேசமயம் 70% வீதி விபத்துக்கள் குறைந்த வருமானம் கொண்ட பயணிகள் மற்றும் வாகன சாரதிகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது . மோட்டார் சைக்கிள்-பாதசாரி விபத்துக்கள் அதிகமாக உள்ளன. இதில் பாதசாரி மரணங்கள் சுமார் 40% ஆகும். அதிவேகமாக வாகனம் செலுத்துதல் . மதுபோதையில் வாகனம் செலுத்துதல் , சோர்வு, டயர் வெடித்தல் , விலங்குகள் ஊடுருவல் ஆகியவை வீதி விபத்துகளுக்கான முக்கிய காரணங்களாக உள்ளன. சோர்வு, தூக்கம் ஆகியவையும் முறையே 9% மற்றும் 15% சாரதிகளை பாதிக்கின்றன. வாகனம் செலுத்தும்போது கைப்பேசிகளை பயன்படுத்துவதும் வாகன விபத்துகளுக்கு காரணமாகிறது. போதைப்பொருள் உபயோகிப்பதும் விபத்துகளை அதிகரிக்கச் செய்கிறது. ஆனால் போதைப்பொருள் இருக்கிறதா என்று சோதிக்கும் கருவிகள் இல்லாததாலும், போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் விதிமுறைகள் இல்லாததாலும் இது கண்டறியப்படாமல் போகிறது.

வீதி விபத்துகளை தடுக்க வேக முகாமைத்துவம் ஒரு அடிப்படைத் தேவை.சகல வீதி விபத்து மரணங்கள் மற்றும் காயங்களுக்கு வேகம் ஒரு முக்கிய காரணியாகும். வேக எல்லைகளை, வீதிப்போக்குவரத்தை மேற்கொள்வோர் கடைப்பிடித்தால் விபத்துகளால் ஏற்படும் இழப்புகளை கணிசமாகக் குறைக்கமுடியும்.ஏமாற்றமளிக்கும் விடயம் என்னவென்றால், போக்குவரத்துச் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லையென்பதே . பயணிகள் மற்றும் பாதசாரிகள் மத்தியில் போக்குவரத்து விதிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றபோதிலும் விபத்துகளைக் குறைப்பதில் எந்தப் பயனும் இல்லையென்பது கவலைக்குரிய விடயம்.

# 12 வருட போராட்டத்திற்கு 'மற்றொரு பலத்த அடி'

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கருத்து நீதி கிடைக்காதவரை போராட்டம் ஓயாது

மீரா ஸ்ரீநிவாசன்



**11 இளைஞர்களை கடத்தி கொலை செய்வதற்கு சதி செய்த குற்றசாட்டு தொடர்பான வழக்கில் 14 ஆவது குற்றவாளியாக முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஜனாதிபதி ராஜபக்ஷவினால் வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சர்ச்சைக்குரிய நியமனத்தை அவர்களின் நீதிக்கான 12 வருடகாலப் போராட்டத்திற்கு 'மற்றொரு அடி' என்று குறிப்பிடுகின்றன**

கடத்தல் மற்றும் கொலைக்கு சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவரை வடமேல் மாகாண ஆளுநராக ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ வியாழக்கிழமை நியமித்துள்ளார். நீதிக்கான தங்களின் 12 வருடகாலப் போராட்டத்திற்கு 'மற்றொரு அடி' யென இதனை பாதிக்கப்பட்ட வர்களின் குடும்பங்கள் குறிப்பிட்டுள்ளன.

சமீபத்திய மாதங்களில் ராஜபக்ஷவின் இரண்டாவது சர்ச்சைக்குரிய நியமனம் இதுவாகும். அக்டோபரில், அவர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக முன்னர் தண்டிக்கப்பட்டிருந்தவரும், முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்ட பிற்போக்குத்தனமான பௌத்த துறவி கலகொட அத்தே ஞானசாரரை முக்கியமான சட்ட மறுசீரமைப்புகளுக்கான குழுவின் தலைவராக தெரிவு செய்திருந்தார் .

வியாழனன்று ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்ட புகைப்படம், கடற்படையின் அட்மிரல் வசந்த கரன்னாகொட, இலங்கையின் மாகாண நிர்வாகக் கட்டமைப்பின் மிகவும் அதிகாரம் வாய்ந்த பதவிக்கு ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவின் பிரதிநிதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதை காண்பித்தது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் ஆயுள் காலம் காலாவதியான பின்னர், இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களும் தற்போது அந்தந்த ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

கடற்படைத் தளபதியாக மனிதாபிமான நடவடிக்கையின் போது தாய்நாட்டிற்கு மிகச் சிறந்த சேவையை கரன்னாகொட செய்துள்ளார் என்று ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பொதுவாக நேவி 11 என்று அழைக்கப்படும் கொடூரமான வழக்கில் அவர் 14 ஆவது குற்றவாளியாக குறிப்பிடப்பட்டிருந்தார் .

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில், 11 இளைஞர்கள் அவர்களில் பெரும்பாலானோர் பதின்மப்பருவத்தின் பிற்பகுதியில் இருந்தவர்கள் . சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த அவர்கள் கொழும்பைச் சுற்றியுள்ள பல்வேறு புறநகர்ப் பகுதிகளிலிருந்து காணாமல் போயிருந்தனர்.

யுத்தத்தின் இறுதி இரண்டு வருட காலப்பகுதியில் இளைஞர்கள் பலவந்தமாக காணாமல் போயிருந்த போதிலும், அவர்கள் பணத்திற்காக கடத்தப்பட்டவர்கள் என்று புலனாய்வாளர்கள்தெரிவித்திருந்தனர். அந்தத் தருணத்தில் பலவந்தமாக காணாமல் போன தமிழர்களைப் போன்று இந்த விவகாரம் நேரடியாக யுத்தத்துடன் தொடர்புடையது அல்ல என்றும் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் .

பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட சாட்சிகளின் பதிவுகள் மற்றும் ஆதாரங்களுடன் கடற்படை அதிகாரிகள் குழுவின் வெளிப்படையான தலையீட்டைச் சுட்டிக்காட்டி, சட்டமா அதிபர் திணைக்களம், 2019 நவம்பரில், 11 இளைஞர்களைக் கடத்தி கொலை செய்ய சதி செய்ததாக ஒரு டஜன் உயர் கடற்படை அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டியிருந்தது.

கடற்படை உயர் அதிகாரிகளைக் கொண்ட சந்தேக நபர்களின் பட்டியலில், கடத்தல்களின் போது கடற்படைத் தளபதியாக இருந்த கரன்னாகொடவும் உள்ளடங்கியிருந்தார். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களில், கடத்தல் தொடர்பான கொடூரமான விவரங்கள், கப்பம் வாங்குதல், கிழக்கு மாவட்டமான திருகோணமலையில் நிலத்தடி அறையில் தடுத்துவைத்தல் மற்றும் சிறுவர்கள் கொல்லப்பட்டு மற்றும் அவர்களின் உடல்கள் கடலில் வீசப்பட்டதாக புலனாய்வாளர்களை ஊகிக்க வழி வகுத்த சாட்சிகளின் பதிவுகள் ஆகியவை கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான உள்ளூர் ஊடக அறிக்கைகளின் பிரகாரம் செயற்பாட்டாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உள்நாட்டுப் போர் இடம்பெற்ற ஆண்டுகளில் இராணுவத்தின் குற்றவியல் நடத்தையின் 'அடையாளமாக' வழக்கைக் கருதுகின்றனர். நீதிமன்றத்தில் சாட்சியங்கள் சேகரித்தல் மற்றும் வழக்குத் தொடர்ந்ததன் மூலம் ஏற்பட்ட அரியதொரு முன்னேற்றத்திற்காகவும் இது கவனத்தை ஈர்த்திருந்தது .

எவ்வாறாயினும், கடந்த ஆகஸ்ட்டில் ஒரு புதிரான தலைகீழான திருப்பமாக , அட்மிரல் மீதான குற்றச்சாட்டுகளைத் தொடருவதில்லை என்று தீர்மானித்திருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் கூறியது.

### குறுகிய காலம் மட்டும் நீடித்திருந்த நம்பிக்கைகள்

உயர்மட்ட வழக்கில் 66% குற்றச்சாட்டுகளுக்கான குற்றப்பத்திரிகைகளை வழங்குவதன் மூலம் குடும்பங்களுக்கு நம்பிக்கைக்கான சில காரணங்களை வழங்கிய பிறகு, சந்தேகத்திற்குரிய ஒரு நபரை மட்டும் பாரதூரமான குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிப்பதற்கான சட்டமா அதிபர் திணைக்களத்தின் முடிவு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட் உள்ளடங்கலாக பரந்தளவு கவனத்தை ஈர்த்திருந்தது. அவர் இலங்கையில் 'பல அடையாள மனித உரிமை வழக்குகளில்' நீதித்துறை நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து கவலை தெரிவித்திருந்தார் . '2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 11 பேர் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டை தொடரப் போவதில்லை என்ற சட்டமா அதிபரின் தீர்மானமும் இதில் அடங்கும்' என்று அவர் இந்த ஆண்டு செப்டெம்பரில் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்திருந்தார்.

குடும்பங்களின் கண்ணோட்டத்தில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் முடிவு வழக்குக்கு 'பலத்த தாக்கத்தை' அளித்தது. அவர்கள் அதை இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவால் விடுத்திருந்தனர். பின்னர் நீதிமன்றம் ,சந்தேகத்திற்குரிய ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டை கைவிட சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு விருப்புரிமை உள்ளது என்ற அடிப்படையில் அவர்களின் மனுவை நிராகரித்தது.

அக்டோபரில் நீதிமன்றத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் முடிவு பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்திருந்த நீதி அமைச்சர் அலி சப்ரி, வழக்கொன்றின் 'தகைமையின் அடிப்படையில் மட்டுமே செயற்படும்' சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணியில் அரசாங்கம் 'தலையிடாது' எங்கள் அனுதாபங்கள் குடும்பங்களுடன் உள்ளன. குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று அவர் தி இந்துவிடம் கூறினார்.

மூல வழக்கின் விசாரணைகள் தொடரும் நிலையில்,ஏனைய 13 அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகள் உள்ளன மற்றும் அட்மிரல் இன்னும் விடுவிக்கப்படவில்லை . வியாழக்கிழமை நியமனம் குறித்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அதிர்ச்சியடைந்துள்ளன .

### 'முற்றிலும் நியாயமற்றது'

காணாமல் போன 11 இளைஞர்களில் ஒருவரான மொஹமட் டிலான் ஜமால்தீனின் தாயார் ஜமால்டீன் ஜெனிபர் வீரசிங்க, இது முற்றிலும் நியாயமற்றது என்று கூறினார். எனது மகன் கடத்தப்பட்டபோது கடற்படைத் தளபதியாக அட்மிரல் இருந்தார். அவருக்கும் மற்றவர்களுக்கும் என்ன நடந்தது என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரியும். அதனால்தான் அவர் சந்தேக நபராக பெயரிடப்பட்டார். எப்படி அவருக்கு இப்படி ஒரு பதவியை கொடுக்க முடிந்தது?என்று அவர் கேட்டார். இதனை 'மற்றொரு பெரிய அடி' என்று அவர் குறிப்பிட்டார் .

61 வயதான திருமதி வீரசிங்க, தெற்கில் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் ஒரு போராட்டத்தையும் தவறவிடவில்லை . 1970 மற்றும் 1980 களில் இடதுசாரி மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுதக் கிளர்ச்சிகளின் போது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல் போயினர். போராட்டம் உயர் நீதிமன்றத்திற்கு வெளியேயும் வேறு இடங்களிலும் அவ்வப்போது நடத்தப்பட்டது. 1980 களில் இருந்து 60,000 முதல் 1 இலட்சம் வரை பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் எண்ணிக்கையில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என்று உரிமைகள் கண்காணிப்பு அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. வடக்கில் தமிழ் மக்கள் காணாமல் போன தமது உறவுகளுக்கு பதில் கோரி பல வருடங்களாக போராட்டம் நடத்தி வருவது போன்று, 11 இளைஞர்களின் தாய்மார்களுக்கும் எந்த முடிவும் கிடைக்கவில்லை.

பொலிஸார் ஆதாரங்களில் இருந்து ஊகிக்கப்பட்டதை ஏற்க மறுத்து, காணாமல் போன மற்றொரு இளைஞரான முகமது சஜித்தின் தாயான அமீனதுல் ஜிக்ப்ரியா சப்ரீன், தனது மகன் எங்கோ உயிருடன் இருப்பதாக உறுதியாக நம்புகிறார். 'நான் இப்போது 12 ஆண்டுகளாக வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு ஓடிக்கொண்டிருக்கிறேன். எனக்கு வயதாகிறது.அன்று என்ன நடந்தது என்பதை நான் மறந்துவிட்டேன்' என்று அவர் சமீபத்திய நீதிமன்ற விசாரணைக்குப் பிறகு இந்துவிடம் கூறினார். கண்ணீருடன் தனது மகனைப் பற்றிப் பேசுகையில், திருமதி சப்ரீன், அவர் 'ஒரு இரத்தினம்' . தமிழ் நடிகர் சூர்யாவை போல் இருக்கிறார், தலைமுடியை ஒரு பக்கமாக 'நேர்த்தியாக சீவப்பட்டவர்' என்று கூறினார். எனக்கு வேண்டியதெல்லாம் என் மகனைத் திரும்பப் பெற வேண்டும் என்பதுதான். அதன்பிறகு, இந்த வழக்குகளைப் பற்றியோ அல்லது பையன்களை இவ்வளவு காலம் யார் வைத்திருந்தனர் என்பது பற்றியோ நான் சிந்திக்கமாட்டேன். நான் யாரையும் தண்டிக்க விரும்பவில்லை. எனக்கு என் மகன் மட்டுமே வேண்டும் என்று கூறினார்.

அட்மிரலை ஆளுநராக ஜனாதிபதி நியமித்தது சமீபத்திய ஆண்டுகளில் சிவிலியன் பதவிகள் வழங்கப்பட்ட இராணுவ வீரர்களின் பட்டியலில் சேர்க்கிறது. 2020 ஆம் ஆண்டு முதல்,. ராஜபக்ஷ குறைந்தபட்சம் சேவையாற்றிய அல்லது முன்னாள் இராணுவ மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் 28 பேரை முக்கிய நிர்வாக பதவிகளுக்கு நியமித்துள்ளார் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகர் பச்லெட் இந்த வருட தொடக்கத்தில் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பைத் தளமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனமான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணி பவானி பொன்சேகாவின் கூற்றுப்படி கரன்னாகொடவின் நியமனம் 'இரட்டை அடி' ஆகும். 'இது தண்டனை விலக்கீடு மற்றும் இராணுவமயமாக்கலை மேலும் வலுப்படுத்துகிறது' என்று அவர் மேலும் கூறினார். 'அரசியல் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான அரசாங்கத்தின் முழுமையான அலட்சியம் பற்றிய தெளிவான அறிகுறியாகும்' என அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் இராணுவ அதிகாரியான ஜனாதிபதி ராஜபக்ஷ ,'போர் வீரர்களை' எந்த விலையிலும் பாதுகாப்பதாக உறுதியளித்த உறுதிமொழியுடன் மட்டுமே இது ஒத்துப்போகிறது. இருப்பினும் அவர்களில் சிலர் கடுமையான போர்க்குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர். 2000 ஆம் ஆண்டு சிவில்யுத்த காலத்தில் ஐந்து வயது சிறுவன் மற்றும் இரண்டு பதின்மப் பருவத்தினர் உட்பட 8 தமிழ் பொது மக்களைக் கொன்றதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த சுனில் ரத்னாயக்கவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குப் பிறகு மன்னிப்பளித்து நடவடிக்கை எடுப்பதற்கான வாக்குறுதியை ராஜபக்ஷ செயற்படுத்தினார் .

இராணுவத்தில் பிணைப்பைக் கொண்டிருந்தாலும் பாதுகாப்பை உணரவில்லை. எனது கணவரும் ஓய்வுபெற்ற இராணுவ வீரர். அவர் சிங்ஹ படையணியில் இருந்தார். அவரும் நாட்டுக்கு சேவை செய்தார். ஜனாதிபதி ஏன் எங்களை கவனிக்கவில்லை? என்று காணாமல் போனவர்கள் தொடர்பான ஒரு சமீபத்திய நிகழ்வில் பேசுகையில், தன் ஆத்திரத்தை மறைத்துக்கொண்டு அவர் கேட்டார்.

வியாழக்கிழமை ஏற்பட்ட மாற்றம் ஒரு பின்னடைவாக இருக்கலாம். ஆனால் போராட்டம் முடிவடையவில்லை என்று திருமதி வீரசிங்க கூறினார். நீதிக்காக போராட ஜெனீவாவோ அல்லது வேறு எங்கும் செல்ல நான் தயாராக இருக்கிறேன். நான் விடமாட்டேன். நீதி கிடைக்காதவரை இந்தப் போராட்டம் ஓயாது என்று அவர் கூறியுள்ளார்.

இந்து

06



# நாளை ஆளுநர் தலைமையில் வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



வடக்கு அபிவிருத்தி நிர்வாகத்தினை துரிதமாக முன்னெடுக்கும் நோக்கில், நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில், வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு, வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய அபிவிருத்தி , நிர்வாகம், திட்டமிடல் மற்றும் அரசாங்க சேவையில், தேக்கநிலையிலுள்ள செயற் திட்டங்களை துரிதமாக முன்னெடுக்கும் நோக்கில், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில், வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் விசேடமாக கூட்டப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள மாகாண கட்டடத்தில், வடமாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் விசேடமாக இடம்பெறவுள்ளது.

இவ் விசேட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தினை, மாதாந்தம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இக்கூட்டத்திற்கு வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மத்தியின் அமைச்சர், வடக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் விசேடமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 2022 இல், இவ் மாகாண கூட்டம் புதுப்பொலிவுடன்,அபிவிருத்தி-நிர்வாகத்தினை (Development Administration மையப்படுத்தி, சேவைகள் ஒருங்கிணைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (50)

## முச்சக்கர வண்டியைப் பந்தாடியது ரயில் பாய்ந்து உயிர் தப்பிய சாரதி



நேற்று முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தாண்டிக்குளம் ரயில் நிலையத்திற்கு அண்மையில், பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முயன்ற, முச்சக்கர வண்டி, ரயில் விபத்தில் சிக்கிச் சேதமடைந்துள்ளதுடன், முச்சக்கர வண்டியின் சாரதி பாய்ந்து உயிர் தப்பியுள்ளார்.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த குளிரூட்டிய ரயில், முச்சக்கர வண்டியொன்றை மோதித் தள்ளியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஓமந்தை - தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர்கள் யாழில் கலந்துரையாடல்



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் அரசியல் தலைவர்கள் பங்கேற்ற கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், கட்சியின் யாழ்., கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய மாநாடு டிசம்பர் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு முன்னேற்பாடாக,மாவட்ட ரீதியாக கட்சியை வலுவூட்டும் வகையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

விசேடமாக அக்கட்சியின் பிரதிச் செயலாளர் திலகஸ்ரீ, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ராஜிபாஸ்கர், கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் டேவிட் நவரட்ணராஜ் ஆகியோர் கலந்து கொண்டு, சமகால நிலைமைகள் தொடர்பாக, கருத்து தெரிவித்தனர். (40)

## வல்லைப் பாலத்தடியில் தொடரும் விபத்துக்கள் இரு வாகனங்கள் சேதம்

வல்லைப் பாலத்தடியில் சிற்றூர்தியும் ஹண்டர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியதில்,இரண்டு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமையும், இப்பகுதியில் கெப் ரக வாகனம் விபத்துக்குள்ளானது. மேலும், நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில்,இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வல்லைப் பாலத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளன. (44)

## வரணியில் பேருந்தும் டிப்பரும் மோதியதில் மூவர் படுகாயம்




கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணிப் பிரதேசத்தில், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில், மூவர் படுகாயமடைந்தனர்.

கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் பேருந்துச் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்தினை பின் புறமாக வந்த டிப்பர் வாகனம் மோதியதில், இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

வரணி மரக்கறிச் சந்தைப் பகுதியில் பேருந்தினை டிப்பர் வாகனம் முந்துவதற்கு முற்பட்ட வேளையில் பேருந்தின் பின்புறம் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை, கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (13)

## யாழ்.பல்கலையில் விசேட கலந்துரையாடல் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கோரிக்கை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் கலை வரலாற்றுக் கற்கை நெறியானது, இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2:30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியிலுள்ள 108 ஆம் இலக்க விரிவுரை மண்டபத்தில், லண்டன் எக்ஸஸ்ரர் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி கில்ஜூலெப் மற்றும் லண்டன் லெஸ்ரர் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த, பேராசிரியர் ரூத்யங் ஆகியோரின் 'சமூகத்தையும் அடையாளத்தையும் கண்டடைதல்: தொல்லியலுக்கான ஒரு வகிபாகம்' எனும் தலைப்பிலான உரையையும், கலந்துரையாடலையும், ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வுரையானது, தொல்லியலில் பல்வேறு சமூகங்களின் அடையாளங்களின் வெளிப்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதனை ஆராய்வதாக அமைவதோடு, மேலும், கடந்த 500 வருட மனித செயற்பாடுகள் பற்றிய புரிதலுக்கு, தொல்லியல் எவ்வாறு பங்களிக்கின்றது என்பது குறித்து, பரிசீலிப்பதாகவும் அமையவுள்ளது.

இந்நிகழ்வில், தொல்லியல், கலை, வரலாறு, கலாசாரத் துறை சார்ந்தவர்கள், மரபுரிமை சார் செயற்பாட்டாளர்கள், மாணவர்கள்,மற்றும் ஆர்வமுடைய அனைவரையும் கலந்துகொள்ளுமாறும், கோவிட் 19 தொற்றிற்கு அமைய, சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியதாக, இந்நிகழ்வு நடைபெறுமெனவும், நுண்கலைத் துறையின் தலைவர், கலாநிதி ரதிதரன் அறிவித்துள்ளார்.

## டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்த பேசாலையில் பாரிய சிரமதானம்



மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக பெய்து வந்த கடும் மழை அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல கிராமங்களில், டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில், நேற்றுக் காலை பேசாலைப் பிரதேசத்தில் பாரிய சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக, மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுத்தோப்பு, காட்டாஸ் பத்திரி, பேசாலை, முருகன் கோவில் பகுதி, பேசாலை 100 வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீரானது, தொடர்ந்தும் வீடுகளில் தேங்கியுள்ளது.குறித்த பகுதிகளிலுள்ள பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள், இன்றுவரை உறவினர்களின் வீடுகளில் வாழ்ந்து வரும் நிலையே, காணப்படுகின்றது.

குறித்த பகுதிகளில், வெள்ள நீர் ஓடுவதற்கான இயற்கையாக காணப்பட்ட ஓடைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களினால், முன்னெடுக்கப்பட்ட வடிகால் வசதி மற்றும் காற்றாலை நிர்மாணம் போன்றவற்றினால், அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வெள்ள நீர் வெளியேற முடியாத நிலை காணப்படுவதாக, பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த கிராமப் பகுதிகளில் டெங்கு நோய் அபாயம் மற்றும் நோய்த்தொற்றுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பேசாலைப் பிரதேசத்தில் நேற்று வரை 90 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டு, மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிய வருகின்றது.

இந்த நிலையில், பேசாலைக் கிராம மக்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தமது கிராமங்களில், பாரிய சிரமதானப் பணியை முன்னெடுத்தனர். கிராம மக்களுடன் கடற்படையினரும், இராணுவத்தினரும் கலந்து கொண்டிருந்தனர். கிராமத்தில் கடற்கரையை அண்டிய பகுதிகளில் மதுபான வெற்றுப் போத்தல்கள் மற்றும் நுளம்பு பெருகக் கூடிய பல்வேறு கழிவுப் பொருட்கள், கிராம மக்களினால் சிரமதானம் மூலம் அகற்றப்பட்டது. கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்ட, பாவனைக்கு உட்படுத்தாத மீன்பிடி உபகரங்களும் குறித்த பிதேசத்திலிருந்து முழுமையாக அகற்றப்பட்டன.

## வியாபாரிமூலையிலும் வெடித்தது சமையல் எரிவாயு அடுப்பு





வடமராட்சி வியாபாரிமூலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வடமராட்சி வியாபாரி மூலைப் பகுதியில், நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வியாபாரி மூலையிலுள்ள, உள்ள ரவி என்பவரது வீட்டில், அவரின் மனைவி உணவை தயாரித்துக் கொள்வதற்காக எரிவாயு அடுப்பை இயக்கியுள்ளார். அடுப்பு வேலை செய்து கொண்டிருந்தபோது சுமார் 20 நிமிடத்தில், அந்த அடுப்பு வெடித்துள்ளது.

அடுப்பிலிருந்து அவர் சிறிது தூரம் விலத்தி நின்றதனால், எவருக்கும் காயமேற்படவில்லை. அதன் பின்னர் எரிவாயு சிலிண்டரை நிறுத்திவிட்டு, நீர் ஊற்றிப் பார்த்த போது, எரிவாயு வெளியேறுவதனை, அவதானிக்க முடிந்ததாக, வீட்டின் உரிமையாளரினால்,பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (21)

## மோட்டார் சைக்கிள் கோர விபத்து ஒருவர் காயம்



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் பகுதியில் ஏ-9வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து, வீதியோரம் காணப்பட்ட தூணுடன் மோதியதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர், பலத்த காயமடைந்துள்ளார்.இந்தச் சம்பவத்தில், மிருசுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த, 34வயதான சுபாஸ்கரன் என்பவரே படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை, கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (13)

## மீன் பிடித்த சிறுவர்களின் தூண்டிலில் சிக்கிய வெடிகுண்டு



யாழ்ப்பாணம் மடம் வீதியிலுள்ள கால்வாயொன்றில், சிறுவர்கள் நேற்று மீன் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதன்போது அவர்களது தூண்டிலில் திடீரென ஒரு பாரமான பை அகப்பட்டது. உடனே குறித்த சிறுவர்கள் அதனைத் தூக்கிப் பார்த்தபோது, அப்பையில் துருப்பிடித்த நிலையில், வெடிகுண்டு இருந்தது அவதானிக்கப்பட்டது.இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணப் பொலிஸார் குறித்த வெடிகுண்டினை, நீதிமன்றத்தின் அனுமதி பெற்று, விசேட அதிரடிப் படையின் உதவியுடன், மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (75)


## தவறுகளைத் தட்டிக் கேட்க முடியாவிடின்,இதையாவது செய்யுங்கள் - நகரசபை உறுப்பினர் கோரிக்கை-

தவறுகளை தட்டிக்கேட்க முடியாவிட்டாலும் அந்த தவறுகளைக் கட்டுப்படுத்துவதற்கு, உரிய தரப்பிற்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையாவது முன்னெடுக்க வேண்டுமென, சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது, எமது பிரதேசத்தில் பல சமூக விரோதச் செயற்பாடுகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. அந்தச் சமூக விரோதச் செயற்பாடுகள் சிலவற்றின் பின்னணியில், பெரும் புள்ளிகள் காணப்படுகின்றனர்.

எனவே, எம்மால் தவறுகளைக் தட்டிக்கேட்க முடியாவிட்டாலும், தட்டிக்கேட்கக் கூடிய தரப்பினரிடம், அதனைத் தெரியப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளையாவது, நாம் மேற்கொள்ள வேண்டும். அத்துடன், எமது சபையின் பதவிக் காலம் நிறைவடைவதற்குள், சகல பிரச்சினைகளையும் சரிப்படுத்த வேண்டும். குறிப்பாக சிறுவர் பூங்கா அமைக்கும் விடயத்தை துரிதப்படுத்த வேண்டுமென்பதுடன், சாவகச்சேரி பொதுச் சந்தையின் வருமானம் பாதிப்படையாத வண்ணம், சந்தை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார். (13)



# திண்மக் கழிவுகளினால் அழிவடையும் அபாயத்தில் இயற்கை நீர் ஊற்றுகள்



முல்லைத்தீவு-கரைதுறைபற்றின் இயற்கை நீர் ஊற்றுகள் இருக்கும் இடங்களில் பிளாஸ்ரிக் இலத்திரனியல், விலங்குக் கழிவுகள் மக்களினால் கொட்டப்படுவதனால், பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருவதாக, கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது,

எமது இயற்கை நீர் ஊற்றுக்களான ஊற்றங்கரை மற்றும் புதறிகுடா, குஞ்சுக்குளம் மற்றும் பெரும்பீலி ஆகிய இடங்களில், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் விலங்குக் கழிவுகள் என்பனவற்றினை மக்கள் கொட்டுவதனால், அப்பகுதிகளில் உள்ள அரியவகை தாவரங்கள் பல அழிவடைந்துள்ளதுடன், தாவரங்கள் அருகிச் செல்கின்றன.

அதுமட்டுமல்லாமல், நீர் மிகவும் மாசடைகின்றது.

இந்த ஊற்று நீர்களில் கொட்டப்படும் கழிவுகள், நந்திக்கடலிற்கு கொண்டு செல்லப்படுவதனால், அங்கு வாழ்கின்ற மீன், நண்டு, இறால் போன்ற உயிரினங்கள் அழிவடைகின்றன. இதனால், பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

எனவே, இந்தக் கழிவுகளினைக் கொட்டாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இயற்கை ஊற்றுக்களைப் பாதுகாப்பதன் மூலம், நிலத்தடி நீரைப் பாதுகாத்து, குடிநீர் வளத்தினைப் பேண முடியும்.

இயற்கை ஊற்றுக்களுடன் கழிவுகள் கலப்பதனால், நீரானது பெருமளவில் மாசடைந்து எதிர்காலத்தில் குடிநீருக்குக் கூட நெருக்கடிகள் ஏற்படலாம். இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் எல்லோரும் அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனவும் பிரதேச சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

(27)

## மறைந்த வைத்திய நிபுணரின் நினைவாக நடைபெற்ற மாபெரும் இரத்ததான முகாம்





தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பொது வைத்திய நிபுணர் அமரர் வைத்தியர் அம்பலவாணர் ரகுபதியின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வும், இணுவில் அறிவாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இணுவிலுள்ள மருத்துவர் ரகுபதி வீதியிலுள்ள அவரது நினைவுத் தூபிக்கு, மகன் ரகுபதி கிருபகன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதனைத் தொடர்ந்து, இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் நடைபெற்றது.அதனைத் தொடர்ந்து, சுடரேற்றல் மற்றும் ரகுபதியின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தலுடன் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியர் இ.பாலச்சந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா, இணுவில் அறிவாலயத்தின் துணைச் செயலாளரும், வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினருமான வ.தனகோபி ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து, இணுவில். உடுவில் மற்றும் தாவடி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 20 கர்ப்பவதிகளுக்கு, பிரசவத்திற்குத் தேவையான பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு காலை -09.45 மணியளவில் ஆரம்பமாகிப் பிற்பகல்-01.30 மணி வரை இடம்பெற்றது. இந்த நிகழ்வில், இணுவில் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள், இரு பெண்கள் உட்பட 35 பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, இரத்த தானம் வழங்கினர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவினர் நேரடியாக வருகை தந்து, குருதியைப் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி நிகழ்வுகளில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் துறைப் பேராசிரியர் குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கியின் வைத்தியர் வைத்தியகலாநிதி திருமதி.பி.பவித்திரா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் தங்கராஜா ரவினதாஸ், கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் சண்முககுமார் அருள்பவன், யாழ்ப்பாணம் ஓய்வுநிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார், மூத்த ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா, மானிப்பாய் தேசிய அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் செல்லையா சர்வேஸ்வரன், இணுவில் கிராம குடும்பநலச் சுகாதார உத்தியோகத்தர்கள், கிராமமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(18)

## நாட்டில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்படும்; விஜயதாச ராஜபக்ச

இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு முடிந்து பூஜ்ஜியமாகி, நாட்டிற்குள் மிகப் பெரிய பஞ்சம் ஏற்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பன்னிப்பிட்டிய வீர மாவத்தையில் ஐக்கிய பொது சேவை சங்கத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துக்கொண்ட போது செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ராஜபக்ச இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த சில வாரங்களில் அத்தியவசிய உணவு பொருட்களை விநியோகிக்க முடியாத நிலைமைக்கு அரசாங்கம் மாறும். இதனால், அடுத்த சிலநாட்களில் நாட்டிற்குள் கலவரமான நிலைமை ஏற்படும். 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு பின்னர், பிரதமர் தலைமையிலான அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச்சர்களும் ஜனாதிபதியின் அடிமைகளாக மாறியுள்ளனர். தனி நபர் ஒருவர் நாட்டை ஆட்சி செய்யவே 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது எனவும் விஜயதாச ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

# திருவெண்பாவை பூசை வழிபாடுகள் ஆரம்பம்



சிவபெருமானுக்கு உரிய மிக முக்கியமான விரதங்களிலொன்றான, மார்கழி திருவெம்பாவை உற்சவம் யாழ். மாவட்டத்திலுள்ள, சிவன் ஆலயங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, நேற்று முன்தினம் சனிக்கிழமை மிகவும் சிறப்பாக இடம்பெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலில், மார்கழி திருவெம்பாவை உற்சவம், விசேட அபிசேக ஆராதனைகளுடன், இடம்பெற்று 10 திருவெம்பாவை உற்சவப் பாடல்களும் இசைக்கப்பட்டன.

இந்நிகழ்வை, ஆலயபிரதம குரு சிவ ஸ்ரீ சிவனேஸ்ர குருக்கள், கணேஸ் சர்மா தலைமையிலான சிவாச்சாரியர்கள் நடாத்தி வைத்தனர்.

(75)

## உலருணவுப் பொதிகள், பாடசாலை உபகரணங்கள் இராணுவத்தினாரால் வழங்கி வைப்பு



25 குடும்பங்கள் மற்றும் 16 பாடசாலை மாணவர்களுக்கு 'தேசிய உரிமையினைப் பாதுகாக்கும் அமைப்பின்' நிதினுசரணையில், உலருணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களும் வழங்கும் நிகழ்வானது, 52ஆவது காலாட் படைப்பிரிவினுடைய சேனாதிபதியின் தலைமையில், நேற்று முன்தினம் நடைபெற்றது.

காலத்தின் தேவை கருதி அறிவுறுத்தப்பட்டுள்ள, சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில், 523 ஆவது காலாட் படைப்பிரிவினுடைய படைத்தளபதி, இராணுவ உயரதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் உட்பட குறிப்பிட்ட அளவிலானோர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இராணுவத்தினரால் உலருணவுப் பொதிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

52ஆவது காலாட் படைப்பிரிவின் சேனாதிபதி, பிரிகேடியர் சாமந்த விக்ரமசேன அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ், 523 ஆவது காலாட் படைப்பிரிவின் கீழ் காணப்படுகின்ற நாவற்குழிப் பிரதேசத்தில் வாழும்

# அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும், கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வை வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, இடம்பெற்று வரும், இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், இன்று 13.12.2021 திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு, கிளிநொச்சி உருத்திர வேங்கை வைரவர் ஆலயத்தின்,பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ அமிர்த ஸ்ரீ காந்தக்குருக்கள் அவர்களின் அருளாசி உரையும், வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில், நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 300 கிலோ நிறையுள்ள கடலாமையுடன் ஒருவர் பொலிஸாரினால் கைது



சுமார் 300 கிலோ கிராம் எடையுள்ள கடலாமையைப் பிடித்து வைத்திருந்த ஒருவர், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.சந்தேக நபரின் உடமையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆமை, உயிருடன் உள்ளதனால், நீதிமன்றின் அனுமதியுடன், குறிகாட்டுவான் கடலில் மீள விடுவதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான, யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரினால், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

(40)

## அனைவருக்கும் மொழி தெரிந்திரிந்தால் நாட்டில் யுத்தம் நடைபெற்றிருக்காது-யாழில் அத்துரலிய தேரர்



எல்லோருக்கும் மொழி தெரிந்திருந்தால், முப்பது ஆண்டுகால யுத்தம் இடம்பெற்றிருக்காதென,அத்துரலிய தேரர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு சிங்களமும், சிங்கள மக்களுக்கு தமிழும் தெரிந்திருந்தால், 30 வருடகாலமாக இடமாற்ற யுத்தம் இடம்பெற்றிருக்காதென, இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் வடமாகாண தலைமையக் காரியாலயத்தில் இடம்பெற்ற, இரண்டாம் மொழிக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான, சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும் போது, இந்து-பௌத்த கலாச்சாரப் பேரவையின் ஊடாக, சுமார் 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், சிங்கள மொழியைக் கற்று வெளியேறியுள்ள நிலையில், நாம் தொடர்ந்து இந்தத் திட்டத்தினை மேற்கொள்வோம்.

நாட்டில் தற்போது இடம்பெற்று ஆட்சி சரியானதா என்று கேள்விக்கு மத்தியில் பிரச்சினைகளை கூறுவதிலும் பார்க்க, நாட்டில் உள்ள காணிகளை, நாட்டு மக்களுக்கு வழங்குவதன் மூலம், பல பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியும்.

நாட்டின் முதுகெலும்பான விவசாயத்துறையை ஊக்குவிக்க, மக்களுக்கு காணிகளை வழங்க வேண்டும். காஸ் அடுப்புகள் வெடிக்கின்றது எனக் கூறிக் கொண்டிருக்காமல், ஒவ்வொருவரும் இயற்கை வாயுவை உற்பத்தி செய்ய முன்வருவதுடன், வீட்டுக்கு ஒரு பசுவை வளர்த்து வந்தால், தொழில் முயற்சிகள் மேம்படுத்துவதுடன்,விவசாயத் துறையும் முன்னேற்றமடையும்.

ஆகவே, நாட்டை வழிநடத்துபர்களுக்கு இன்னும் மூன்று வருடங்கள் இருக்கின்றன. ஆகவே பொதுமக்கள் சிறந்த முறையில் வாழ்வதற்கு, ஆட்சியாளர்கள் வழிவகுப்பார்களென தான் நம்புவதாகவும். அவர் மேலும் தெரிவித்தார்.

(75)

### மதத் தலைவர்கள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாற்பட்டவர்கள் அல்ல. அரசியல் தலைவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்த மதத் தலைவர்களைப் பயன்படுத்தினால், அது அந்த மதத்தை அவமதிக்கும் செயலாகும்.

நான் ஒரு மதத் தலைவர், அரசியல் ஆதாயம் மற்றும் இலாபத்திற்காக எனது சுதந்திரத்தை காட்டிக் கொடுத்தால் நான் வெட்கப்பட வேண்டும். புத்தபெருமானின் போதனைகளின்படி, அந்தத் தர்மத்தை இந்நாட்டில் நிலைநிறுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

வெசாக் பண்டிகைக்கு மதுவுக்கு தடை விதிக்கப்பட்டால், கிறிஸ்மஸ் பண்டிகைக்கும் தடை செய்யப்பட வேண்டும். மதம் என்பது விருந்து வைப்பது அல்ல.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எவ்விதமான முன்னேற்றத்தையும் காணவில்லை. தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தலைமறைவாக இருப்பதாகவே உணருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

### மீண்டும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயாதீனமாக இருப்பது மட்டுமே போதுமானதல்ல. அதன் வினைத்திறன் மிக முக்கியமானது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கை தற்போது இருக்கும் இடத்தை நோக்கும் போது, எங்கோ ஓரிடத்தில் தவறு நடந்துள்ளது என்பதை எவ்வித விவாதங்களும் இன்றி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் எவர் மீதும் குற்றம் சுமத்துவதில் பயனில்லை. இரவை சபிக்காது, இருள் விலக விளக்கொன்றை ஏற்ற வேண்டும் எனவும் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

## வல்லைப் பாலத்தை சீமெந்துப் பாலமாக மாற்றியமைக்குமாறு கோரிக்கை



யாழிலுள்ள பழமைவாய்ந்த பாலங்களில் முதன்மையான வல்லைப் பாலத்தினை, சீமெந்துப் பாலமாக மாற்றியமைக்குமாறு, பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வல்லைப் பாலம் தற்போது இரும்பினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மழை காலங்களில் இப்பாலத்தில் வழுக்குவதன் மூலம், தொடர்ச்சியாக பல விபத்துக்கள் நடைபெறுவதாக, பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை வேளையில், கன்ரர் வாகனமும், தனியார் மினிபஸ் இடையில் விபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணம், பாலத்தின் வழுக்கும் நிலையேயென, சாரதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வீதி பிரதான வீதியாக அமைவதனால், விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போதுள்ள இரும்புப் பாலத்தை அகற்றி,சீமெந்துப் பாலத்தை அமைக்குமாறும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(21)

### -புலிகளின் தலைவர் போதைப் பொருள் கடத்தினார்;

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்திற்கு கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் கண்டனம்

தமிழ் மக்களின் மனங்களில் நிறைந்த ஒருவரை, அவமானப்படுத்தும் அமைச்சரின் செயலை வன்மையாக கண்டிப்பதாக, கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

என்றும் தமிழ் மக்களின் மனங்களில் நிறைந்திருக்கும் தலைவரை அவமானப்படுத்தும் வகையில், பாராளுமன்றத்தில் இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்துக்களை நாம் வன்மையாக கண்டிக்கின்றோமென, கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் கட்சியின் உறுப்பினர்களான இ.மயில்வாகனம் மற்றும் க.லோறன்ஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் போதைப் பொருள் கடத்தினார், என்றும் அவர் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டார் என்றும் பாராளுமன்றத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பேசியிருந்தார். ஏனவே இவரது கருத்தினை, நாம் எமது கட்சி சார்ந்து வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இனத்தின் விடுதலைக்காக, தான் வரித்துகொண்ட கொள்கைக்காக, தன்னையே அர்ப்பணித்தவர் தலைவர் பிரபாகரன். அவ்வாறான ஒருவரை தன்னுடைய அரசியலுக்காக அவமானப்படுத்துவதனை, ஒரு போதும், ஏற்றுக்கொள்ள முடியாது. உங்களுடைய தலைவர் யாரென, தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது மட்டுமல்ல எப்பொழுது கேட்டாலும் அவர்கள் கூறுவது அந்த ஒரு பெயரை மாத்திரமே. எனவே அவ்வாறன ஒருவரை அவமானப்படுத்துவதனை தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதனை, அமைச்சர் புரிந்துகொள்ள வேண்டுமெனவும், தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர்கள், இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையில், ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்தை தாமும் ஏக மனதாக ஏற்றுக்கொள்வதாகவும், அவர்கள் குறிப்பிட்டனர். (52)

# இழப்பீடு வேண்டாம் எனது பிள்ளையைத் தாருங்கள்

### -ஜனாதிபதி ஆணைக்குழுவில் தாய் உருக்கம்-



2006 ஆம் ஆண்டு திருநெல்வேலி பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட எனது பிள்ளையை மீட்டுத் தாருங்கள் எனக்கு இழப்பீடு வேண்டாம் என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன் தாயொருவர் உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சாட்சியங்களை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், திருநெல்வேலி கடை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தபோது காணாமல் போன எனது மகனை மீட்டுத் தருமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கையை முன் வைத்தேன்.

எனது உடல்நிலை இயங்காத நிலையில் தினமும் மாத்திரைகளை உட்கொண்டே எனது அன்றாடக் கடமைகளை மேற்கொண்டு வருகிறேன். எனக்கு இழப்பீடு வேண்டாம் எனது பிள்ளையை மீட்டுத் தாருங்கள் என ஆணைக்குழுவிடம் உருக்கமான கோரிக்கையை முன்வைத்தார். (75)

# குப்பிழான் கௌரி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவை

குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த திருவெம்பாவை உற்சவம் நேற்று முந்தினம் சனிக்கிழமை காலை-06 மணியளவில் விசேட அபிஷேகம், பூசைகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலயத் திருவெம்பாவை உற்சவத்தில் தினமும் காலை-06 மணியளவில் அபிஷேகம், பூசைகளுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து திருவெம்பாவைப் பாட்டு ஓதுதல் இடம்பெறும். வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதி வரும் திருக்காட்சியும் இடம்பெறும்.(18)

# உள்ளூராட்சி மன்ற தவிசாளர்களுக்கு மூன்று நாள் விசேட செயலமர்வு

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற தவிசாளர்களுக்கான மூன்று நாள் விசேட வதிவிட செயலமர்வு இரத்தினபுரி லகுகல கங்கை ஹோட்டலில் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் இடம்பெறும் என இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவன திட்டமிடலாளர் கலாநிதி பிரேம சிறிகமகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் நிகழ்வினைத் தொடர்ந்து மறுநாள் மாகாண சபைகள் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம்.பி. விரசேகரவின் உரை இடம்பெறும். அதனைத்தொடர்ந்து மாகாண சபைகள் உள்ளூராட்சி இரஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் சிறப்புரை இடம்பெறும்.

இதனைத்தொடாந்த உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட சிக்கல் பற்றிய கலந்துரையாடல் சட்ட அதிகாரி திருமதி சுயனி பிரேமதிலக தலைமையில் இடம்பெறும். தோடர்ந்து இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் - யு.என்.டி.பி. இணைந்த கருத்திட்ட முன்னெற்ற விபரம் ஆராயப்பட்டு விபரங்கள் முன்கொண்டு செல்லப்படும். மறுநாள் 19 ஆம் திகதி செயலமர்வின் தொகுப்பு இடம்பெற்று முடிவுறும். மேற்படி செயலமர்வுக்கு சபைகளின் தவிசாளர்களுடன் ஒரு மக்கள் பிரதிநிதியும் ஒவ்வொரு சபைகளிலிருந்தும் அழைக்கப்பட்டுள்ளனர். (50)

# முள்ளி பாலத்துக்கு அருகில் வீதி திடீரென கீழ் இறங்கியது



முள்ளிப் பாலத்திற்கு அருகாமையில் வெடிப்பு ஏற்பட்டு வீதி கீழ் இறங்கியுள்ளமையால் பொது மக்கள் அவதானமாக பயணிக்குமாறு கோரப்படுகின்றது. வடமராட்சியில் இருந்து தென்மராட்சி நோக்கி செல்லும் புலோலி- கச்சாய் வீதியிலேயே இவ் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

வடமராட்சியில் இருந்து தென்மராட்சி நோக்கி பயணிப்பவர்கள் மற்றும் தென்மராட்சியில் இருந்து வடமராட்சி நோக்கி பயணம் செய்பவர்கள் இப்பாதையை அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர்.

இவ் வீதி புனரமைப்பு செய்யப்பட்டு ஒரு வருடமே ஆகின்ற நிலையில் முள்ளி ஐயங்கண்டி மயானத்துக்கு அருகாமையில் உள்ள பாலத்துக்கு அருகாமையிலேயே வெடிப்பு ஏற்பட்டு வீதி கீழ் இறங்கியுள்ளது. (44)





அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் மாணவர்களின் கல்வி தேவை கருதி கொமர்ஷல் வங்கி வேலணை கிளையினால் புதிய ஃபோட்டோ கொப்பி இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டது. குறித்த இயந்திரத்தினை வங்கி அதிகாரிகள் பாடசாலை அதிபரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.(30)

# அம்பாறை பதில் அரச அதிபராக வேதநாயகம் ஜெகதீசன் நியமனம்



அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபராக, இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய டி.எம்.எல்.பண்டாரநாயக்க, கிழக்கு மாகாண பிரதம செயலாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள நிலையில், அவரது வெற்றிடத்துக்கு பொது நிர்வாக அமைச்சு இப்பதில் நியமனத்தை வழங்கியுள்ளது.

# களபாவோடை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவை

ஏழாலை தெற்கு வசந்தபுரம் களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த திருவெம்பாவை விரத பூசை வழிபாடுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்தும் திருவெம்பாவை விரத காலப் பகுதியான பத்துத் தினங்களும் பூசை வழிபாடுகள் அதிகாலை-05.30 மணியளவில் ஆரம்பமாகி காலை-06 மணியளவில் நிறைவுபெறும்.(18)

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு யாழில் நேற்று கலந்துரையாடல்



ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட தரப்புக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த கலந்துரையாடலில் 43 நபர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களான உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபர் சந்திரா பெனாண்டோ, ஓய்வு பெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியவர்கள் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுடைய கருத்துக்களை கேட்டறிந்தனர்.

கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்திற்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் காணொளி மற்றும் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (40)

# கொட்டகலை பகுதியில் காஸ் அடுப்பு வெடிப்பு



திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ பிரிவில் உள்ள வீடு ஒன்றில் காஸ் அடுப்பு ஒன்று வெடித்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேநீர் தயாரிப்பதற்காக காஸ் அடுப்பை பற்ற வைத்துள்ளனர். 5 நிமிடங்களுக்கு பிறகு காஸ் அடுப்பு வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக வீட்டாளர்கள் தெரிவித்தனர்.

வெடிப்பை அடுத்து காஸ் அடுப்பு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அதன்பின்னர் காஸ் சிலிண்டர் உள்ளிட்ட உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்தாக வீட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பகிரங்க கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சத்தியகாட்டு சந்தையின் 60'X30' விஸ்தீரணம் கொண்ட பழைய கட்டிடம் **அத்திபாரம் தவிர்ந்த** எனைய பகுதி இடித்து அப்புறப்படுதுதுவதற்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்.

தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச் சபை பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்வி மனு கோரப்படுகிறது.

1. ஏலவிற்பனை தேசிய போட்டி பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2021.12.13 - 2021.12.27 ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரை.
   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2021.12.28 பி..ப 2.00 மணிவரை
   கேள்வி திறக்கும் திகதி :- 2021.12.28 பி.ப 2.00 மணி
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2021.12.13ஆம் திகதியிலிருந்து 2021.12.27ஆம் திகதி வரை மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையில் குறித்த கட்டிடத்தை பார்வையிடமுடியும் என்பதுடன் அதே காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படக்கூடிய பிணைப் பணமாக ரூபா 10,000/- இனையும் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 500/- இனையும் வேலைப்பகுதியில் காசாக செலுத்தி கேள்வி படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் ரூபா 500/- பெறுமதியான பற்றுச்சீட்டினை இணைத்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் **"சத்தியகாட்டு சந்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கான கேள்வி"** என தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
5. அதிகூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் 2021.12.29ம் திகதி புதன்கிழமை பி.ப 3.30 மணிக்குள் அத்தொகையினை பிரதேச சபையில் முழுமையாக ஒரே தடவையில் காசாக செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு 2022.01.03ம் திகதிக்குள் குறித்த கட்டிடத்தை **அத்திபாரம் தவிர்ந்த** ஏனைய பகுதிகளை இடித்து குறித்த சந்தை வளாகத்திலிருந்து அகற்றப்பட்டிருத்தல் வேண்டும்.
6. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் உரிய முறையில் இடித்து அகற்ற தவறுவாராயின் வைப்பு பணத்தினை மீளப்பெற முடியாது என்பதுடன் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவுக்கு உரியதாகும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒப்பந்த அளிப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் எந்நேரத்திலும் கேள்விதாரர்களின் பொருட்டு எதுவித பொறுப்புக்களையும் ஏற்காது கேள்வி முறைமையை முடிவுறுத்தி சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரபெறுகைச் சபை,**
**வலிகாமம் மேற்குபிரதேசசபை,**
**சுழிபுரம். (தொ.பே.இல 0212250144 )**
**2021.12.13**

# சந்திமால் கடும்; போராட்டம் வீண் ஒரு ஓட்டத்தால் தம்புள்ளை வெற்றி



லங்கா பிரீமியர் லீக் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் தம்புள்ளை ஜெய்ண்ட்ஸ் அணி, கொழும்பு ஸ்டார்ஸ் அணியை ஒரு ஓட்டத்தினால் தோற்கடித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் ஆரம்ப சுற்றில் இதுவரை விளையாடிய போட்டிகளிலேயே மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த போட்டியாக இந்த ஆட்டம் மாறியது.

தினேஷ் சந்திமாலின் அபாரமான துடுப்பாட்டத்தால் கொழும்பு ஸ்டார்ஸ் அணி வெற்றியின் இறுதி விளிம்பு வரை சென்றது. எனினும் அவர்களின் வெற்றிக் கனவினை மாற்றியமைத்தது சமிக கருணாரத்னவின் இறுதி ஓவர்.

கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமான போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற, தம்புள்ளை ஜெயன்ட்ஸ் அணித் தலைவர் தசுன் ஷனக முதலில் துடுப்பெடுத்தாட தேர்வு செய்தார்.

நிரோஷன் டிக்வெல்லா மற்றும் பில் சால்ட் ஆகியோர் முதல் விக்கெட்டுக்கு 48 ஓட்டங்களை குவித்து இன்னிங்ஸை தொடங்கினர்.

பின்னர் டிக்வெல்ல 30 ஓட்டங்களுடனும், பில் சால்ட் 21 ஓட்டங்களுடனும் சீக்குகே பிரசன்னவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற, முதல் பவர் பிளேயில் தம்புள்ளை ஜெய்ண்ட்ஸ் 6 ஓவர்கள் முடிவில் 53 ஓட்டங்களை எடுத்தது.

இவர்களுக்கு அடுத்தபடியாக வந்த சோஹைப் மக்சூத் மாத்திரம் அதிகபடியாக 24 ஓட்டங்களை பெற, அடுத்தடுத்து வந்த ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியாக 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களை பெற்றது தம்புள்ளை ஜெய்ண்ட்ஸ் அணி.

பந்து வீச்சில் கொழும்பு ஸ்டார்ஸ் சார்பில் ரவி ராம்பால், ஜெப்ரி வெண்டரிசி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், சீகுகே பிரசன்ன 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

139 என்ற இலக்கை துரத்திய கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு ஆரம்பம் முதலே அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிய ஆரம்பித்தது. அதனால் 38 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பறிகொடுத்தது அந்த அணி.

ஆரம்ப வீரர்களான குசல் பெரேரா 5 ஓட்டங்களுடனும், டோம் பென்டன் 8 ஓட்டங்களும் ஆட்டமிழக்க, அடுத்தடுத்து வந்த அஷான் பிரியஞ்சன் 3 ஓட்டங்களுடனும், ஷெர்பேன் ரதர்ஃபோர்ட் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பின்னர் 5 ஆவது விக்கெட்டுக்காக அணித் தலைவர் தனஞ்சய டிசில்வாவும், தினேஷ் சந்திமாலும் ஜோடி சேர்ந்து துடுப்பெடுத்தாட விக்கெட்டுகள் சரியாது ஓட்டங்கள் குவியத் தொடங்கியது.

எனினும் 13 ஆவது ஓவரின் முதலாவது பந்து வீச்சை எதிர்கொண்ட தனஞ்டிய டிசில்வா, பந்தை சிக்ஸருக்கு தூக்க முயன்றார். எனினும் பந்தை எல்லைக் கோட்டுக்கு அருகில் நின்று சாமர்த்தியமாக பிடித்தார் சமிக கருணாரத்ன.

இதனால் கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் 5 ஆவது விக்கெட் 70 ஓட்டங்களுக்கு பறிபோனது.

ஒரு கட்டத்தில் போட்டியின் வெற்றிக்கு 24 பந்துகளில் 52 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. இந் நிலையில் சந்திமால் சிக்ஸர் பவுண்டரிகளாக விளாச இறுதி ஓவரில் 13 ஓட்டம் வெற்றிக்கு என்ற நிலையானது.

இறுதி ஓவருக்காக தம்புள்ளை ஜெய்ண்ட்ஸ் அணிக்காக சமிக கருணாரத்ன பந்துப் பரிமாற்றம் மேற்கொள்ள அந்த ஓவரை எதிர்கொண்ட சந்திமலினால் 11 ஓட்டங்களை மாத்திரம் பெற முடிந்தது. இதனால் தம்புள்ளை ஜெய்ண்ட்ஸ் அணி ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

கொழும்பு அணிக்காக இறுதி வரை போராடிய சந்திமால் 40 பந்துகளில் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 65 ஓட்டங்களை பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் தம்புள்ளை ஜெய்ண்ட்ஸ், ஜப்னா கிங்ஸை பின்னுக்கு தள்ளி புள்ளி பட்டியலில் முதல் இடத்துக்கு வந்துள்ளது.

## லயன் 400 விக்கெட் வீழ்த்தி சாதனை

400 விக்கெட்டுகள் எடுத்த வீரர்களில் சர்வதேச அளவில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீரர் நாதன் லயன் 16 ஆவது இடத்தில் உள்ளார்.

அவுஸ்திரேலிய சுழற்பந்து வீரர் நாதன் லயன் பிரிஸ்பேன் டெஸ்டில் 4 விக்கெட் வீழ்த்தினார். டேவிட் மலான் விக்கெட்டை கைப்பற்றியதன் மூலம் அவர் 400 ஆவது விக்கெட்டை தொட்டார்.

34 வயதான அவர் 101 டெஸ்டில் விளையாடி 403 விக்கெட் கைப்பற்றி உள்ளார். 50 ஓட்டம் கொடுத்து 8 விக்கெட் வீழ்த்தியது அவரது சிறந்த பந்து வீச்சாகும்.

வார்னே, மெக்ராத் ஆகியோருக்கு அடுத்தபடியாக 400 விக்கெட்டை எடுத்த 3 ஆவது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை லயன் பெற்றார். சர்வதேச அளவில் 16 ஆவது வீரர் ஆவார்.

## மாகாண மட்ட மல்யுத்தம் போட்டி முல்லைத்தீவு மாவட்டம் அசத்தல்





மாகாண மல்யுத்த போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணி ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பிரிவுகளிலும் தமது அபாரமான திறமையை வெளிக்காட்டி முதலாமிடத்தைப் பெற்றனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினரால் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஆண்கள் பெண்களுக்கான மல்யுத்தப் போட்டிகள் முல்லைத்தீவு உள்ளக விளையாடரங்கில் நடைபெற்றது.

இவ்வாண்டு முதன்முறையாக பெண்களுக்கான மல்யுத்தப் போட்டி அறிமுகப் படுத்தப்பட்டது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட அணி 09 தங்கப் பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட 14 பதக்கங்களை பெற்று முதலாமிடத்தையும், வவுனியா மாவட்ட அணி ஒரு தங்கப் பதக்கத்தை பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணி 8 தங்கம் மற்றும் 9 வெள்ளிப் பதக்கம், 5 வெண்கலப் பதக்கம் உட்பட 22 பதக்கங்களை பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றி முதலாமிடத்தையும், வவுனியா மாவட்ட அணி 4 தங்கப் பதக்கங்கள், 4 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள், உட்பட 11 பதக்கங்களை பெற்று இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாண மாவட்ட அணி ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கங்கள் உட்பட 3 பதக்கங்களை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக்கேடயங்களை வழங்கி வைத்தார்.

(21)





தெல்தெனிய நகரத்திற்கு வலிமை சேர்க்க இன்றிலிருந்து இலங்கை வங்கி புதியதோர் இடத்தில்.

நவீன வங்கியியல் வசதிகளுடனும் 24 மணிநேரமும் தொழிற்படும் பணவைப்பு, மீளப் பெறும் இயந்திரங்களுடனும் (CRM) முற்றிலும் டிஜிற்றல் மயமாக்கப்பட்ட தெல்தெனிய இலங்கை வங்கிக் கிளையானது, இன்று சுபவேளையான மு.ப 9:35 மணிக்கு சுகாதார வழிகாட்டல்களுக்கு அமையத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இணையற்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ள எமது வங்கிக் கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கிறோம்!

இலக்கம்: 21, வில்அமுன, தெல்தெனிய.
தொலைபேசி: 081 237 6820 | மின்னஞ்சல்: boc781@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்...

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ 0112477255 🖷 0112477716 dfe@cbsl.lk www.dfe.lk


இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சங்கமன்கண்டியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை எதிர்ப்பையடுத்து அகற்றப்பட்டது



பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சங்கமன்கண்டியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை எதிர்ப்பையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அகற்றப்பட்டுள்ளது.

அதாவது தமிழர்கள் வாழும் சங்கமன்கண்டி பகுதியிலுள்ள மயானத்துக்கு முன்பாகவுள்ள அரச காணியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை புத்தர் சிலையொன்று திடீரென வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அப்பிரதேச மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார், பொத்துவில் பிரதேச செயலாளர், பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் அந்த இடத்துக்கு வந்தனர்.

இதேவேளை குறித்த சிலையை வைப்பதற்கு முறையான அனுமதியை பிரதேச சபையில் பெற்றிருக்கவில்லையென பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் பொத்துவில் பிரதேச சபையின் செயலாளரால் முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் எதிர்ப்புகள் வலுக்கவே புத்தர் சிலையை இரண்டு நாட்களுக்குள் அங்கிருந்து அகற்றுவதாக பொலிஸார் நேற்று முன் தினம் சனிக்கிழமை வாக்குறுதி வழங்கினர்.

இதையடுத்து சிலை வைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தோர் அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்தப் பின்னணியிலேயே சங்கமன்கண்டி பகுதியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை நேற்று ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

# பொரளை நகைக் கடை கொள்ளை; விசாரணைக்கு 5 பொலிஸ் குழுக்கள் நியமனம்

பொரளை - மருதானை வீதியிலுள்ள நகைக் கடையொன்றில் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகளுக்காக 5 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இச் சம்பவம் குறித்து கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நகைக் கடையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை பிற்பகல் மோட்டார் சைக்கிளில் முகத்தை மூடியவாறு வந்த இருவர், வானத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தி அங்கிருந்த தங்காபரணங்கள் உள்ளிட்ட 05 பெட்டிகளை அங்கிருந்து கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லையெனவும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்காக, அவர்கள் பயணித்த உந்துருளியின் இலக்கத் தகடை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த பகுதியில் உள்ள சி.சி.ரி.வி காணொளி காட்சிகளை ஆராய்ந்து, விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# உணவு பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்க நடவடிக்கை முன்னெடுப்பு

**-அமைச்சர் சந்திரசேன-**



உணவு பற்றாக்குறை ஏற்படாமல் தவிர்க்கும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். இதற்காக நாடளாவிய ரீதியில் பயிர்செய்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர்; குறிப்பிட்டுள்ளார் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாத காலப்பகுதியில் உணவு தட்டுப்பாட்டிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் இயற்கை வள பேராசிரியர் மெத்திகா விதானகே எதிர்வு கூறியிருந்தார். இதேவேளை எமது விவசாயிகளால் பயிரிடக்கூடிய 17 வகை உணவுப் பொருட்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அவை உள்ளூரில் பயிரிடப்பட்ட பின்னர் அவற்றுக்கான இறக்குமதி நிறுத்தப்படும் என்று நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# பெறுகைக்கான அழைப்பு
## வாடகை அடிப்படையிலான வாகனம் பெறுகை - 2021/2022
## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
NP/20/05/PROC/H.V-TEDP/2021/17

நிதிமூலம் - TEDP PROJECT

1. மாகாணக் கல்வித் திணைக்களப் பெறுகைக்குழு (பெரிது) மூலம் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பாவனைக்கென வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினைக் கோருவதற்குத் தீர்மானித்துள்ளது.
2. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
3. தகுதியான கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் தமது பெயர் வராது இருப்பதனை உறுதிப்படுத்தி கீழ்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
   அ) வாகனப் பதிவுச் சான்றிதழ் வடக்கு மாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
   ஆ) வாகனத்தின் முதல் இலங்கைப் பதிவுத்திகதி 01.01.2017ம் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதியாக இருத்தல் வேண்டும்.
4. தகுதியான விண்ணப்பதாரர்கள் பெறுகை உள்ளடக்கம் IIஇல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை செம்மணி வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்வதுடன் பெறுகை ஆவணங்களை அலுவலகக் கடமை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்துமூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 500.00 ரூபா காசாகச் செலுத்தி 13.12.2021ம் திகதி முதல் 24.12.2021ம் திகதி வரை காலை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆங்கில மொழியில் அமைந்துள்ள பெறுகை ஆவணங்களினைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 27.12.2021 திகதி 10.00 மணிக்கு முன்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
8. கூறுவிலை சமர்ப்பித்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின் பிரகாரம் அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் அதே நேரம் சகல நடைமுறைகளும் அமுலில் இருக்குமாறு கருதிக்கொள்ளுதல் வேண்டும்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுள்ளது.

பெயர் :- செ. உதயகுமார்
பதவி :- தலைவர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
திணைக்கள பெறுகைகள் குழு (பெரிது),
முகவரி :- மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர்.
தொலைபேசி :- 021-2242804/021-2242800
தொலைநகல் :- 021-2242646
மின்னஞ்சல் :- npedufin@gmail.com



# பிரதேச சபை, காரைநகர்
# பொது அறிவித்தல் - 2022

பின்வரும் அறிவித்தல்கள் 2022.01.01 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

**01.பட வரைஞராகப் பதிவு செய்தல்**

2022ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அல்லது பதிவுகளை புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**02.வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2022**

இப்பிரதேச எல்லைக்குள் நிரந்தர வியாபாரம் செய்வோர், நடமாடும் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர்,மற்றும் சேவைகளை வழங்குவோர் உரிய விண்ணப்பப் படிவத்தை வடக்கு, தெற்கு உப அலுவலகங்களில் (வடக்கு உப அலுவலகம்-சக்கலாவோடை, தெற்கு உப அலுவலகம் -களபூமி) 2022ம் ஆண்டு ஜனவரி 20ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அப்பகுதி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2022.03.31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக்கொள்ளவும். 2022.03.31ஆம் திகதிக்கு பின்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**03.சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL - 2022)**

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார/ தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 2022.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத் தவறுபவர்கள் 2022ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார/ தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**04.துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்**

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2022.03.31ம் திகதிக்கு முன் அப்பகுதி உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2022ம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**05.வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், அமைத்தலும், புதுப்பித்தல் /திருத்த வேலைகள் செய்தலும்**

5.1 எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்திற்கமைவாக தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பப்பத்திரங்களை அப்பகுதி உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எதுவித நட்டாடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

5.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒருவருட காலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ்விண்ணப்பதாரிகள் அனுமதியினைப் புதுப்பித்துக்கொள்வதோடு கட்டிடத்தை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறியத்தருகின்றேன்.

5.3 சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள், கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதிபெற்று அமைத்தல் வேண்டும் என அறியத்தருகின்றேன்.

5.4 அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும். அத்துடன் வீதி எல்லைக்கோட்டை பாதிக்கும் வகையில் அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும்.

| தொ இல | அனுமதியற்று கட்டப்படும் கட்டடங்களிற்கான தண்டப்பண விபரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒரு சதுர மீற்றருக்கு | வர்த்தக மற்றும் ஏனைய தேவைக்கான கட்டடங்கள் ஒரு சதுர மீற்றருக்கு |
|---|---|---|---|
| 01 | அத்திவார வேலை மட்டும் பூர்த்தி (தூண் பீட மட்டம் வரை) | ரூபா 200.00 | ரூபா 500.00 |
| 02 | கூரை மட்டம் வரையிலான நிர்மாணம் (கூரை நீங்கலாக) | ரூபா 300.00 | ரூபா 1,000.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணம் | ரூபா 400.00 | ரூபா 1,500.00 |
| 04 | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டது | ரூபா 500.00 | ரூபா 2,000.00 |
| 05 | எல்லைச்சுவர் (மதில்)/அணைச்சுவர் நிறுவுதல் | ரூபா 400.00 | ரூபா 400.00 |
| 06 | தொலைத் தொடர்பு மற்றும் வானலை வங்கிக் கோபுரங்களை நிறுவுதல் | உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் ரூபா 10,000.00 | |
| 07 | அமைவுச்சான்றிதழைப் பெறாமல் குடியிருத்தல்/பயன்படுத்தல் | நாளொன்றுக்கு 50.00 | |

**06.வீதி ஒழுங்கைப் பேணல்**

காரைநகர் நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக, விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் உள்ள வீதிகளில் கடல் உணவுகள், மரக்கறி, இறைச்சி மற்றும் இதர பொருட்களை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் பொது மக்கள் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக வீதியோரங்களில் கல்,சல்லி,மண் போன்ற கட்டடப்பொருட்கள் பறித்துக்கொள்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் வேண்டிக்கொள்கின்றேன்.

**07.விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/ காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.03.2022ம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பர பதாகைகளும் உரிய நிலையங்களிலிருந்து 31.03.2022ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

கட்டண விபரம் பின்வருமாறு.

| | | 3 மாதம் ரூபா.சதம் | 12 மாதம் ரூபா.சதம் |
|---|---|---|---|
| 01.கொடி விளம்பரம் | 1 சதுர அடி | 10.00 | 40.00 |
| 02.ஒளியூட்டப்பட்ட விளம்பரங்கள் | 1 சதுர அடி | - | 100.00 |
| 03.ஒளியூட்டப்படாதவிளம்பரங்கள் | 1 சதுர அடி | - | 50.00 |
| 04.சுவர்களில்அமைக்கப்பட்ட விளம்பரம் | 1 சதுர அடி | - | 50.00 |

**08.பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

காரைநகர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொது பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை கொட்டுதல் பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்வதோடு அவற்றில் உக்கக்கூடியவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்து சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். பிரதேச சபையால் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படும் இடங்களில் உக்காத கழிவுப்பொருட்களை மாத்திரம் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன், கண்ணாடி என தரம் பிரித்து பொதியிடப்பட்டு கழிவுகள் வைக்கப்படுதல் வேண்டும். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் பிரதேசசபைச் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**09.அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள், காணிகள் தொடர்பான அறிவித்தல்**

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்பட வேண்டும். தவறின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**10.பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்**

அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்படவேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**11.தரகர் முறை நீக்கல்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

**12. நீர் வழங்கல் சேவை**

பொது மக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்விற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் உரிய கட்டணத்தைச் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**13. உழவியந்திரம் , உருளை , பக்கோ சேவை**

பொது மக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது தேவையின் பொருட்டு உழவியந்திரம், உருளை, பக்கோ சேவையினைப் பெறுவதற்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி சேவையினை பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**14. கட்டாக்காலி கால்நடைகள் (ஆடு,மாடு,நாய்)**

பொது மக்கள் தமது கால் நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதனை மீறும் சந்தர்ப்பத்தில் பிரதேச சபையால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்செய்வோர் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. மயிலன் அப்புத்துரை,
தவிசாளர்,
பிரதேசசபை,
காரைநகர்.

2021.12.17.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
14
✽
01
✽
1942

இறப்பு
12
✽
12
✽
2021

## அமரர்
# சிதம்பரப்பிள்ளை நாகம்மா
(மீசாலை வடக்கு, கொடிகாமம்)

யாழ்ப்பாணம், மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த அமரர் சிதம்பரப்பிள்ளை நாகம்மா அவர்கள் நேற்று (12.12.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

செல்வநாயகதாசன் குடும்பத்தினர்.

# தமிழகத்தில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் தொடர்பில் நேற்று தீவிரமாக ஆய்வு



கொரோனா பரவல் காரணமாக ஊரடங்கு மற்றும் கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்ற ய தினம் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தற்போது கொரோனா தொற்று பரவல் படிப்படியாகக் குறைந்து வருவதுடன், தமிழக அரசு ஏற்கனவே அறிவித்த ஊரடங்கு கட்டுப்பாடுகள் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்த நிலையில், கொரோனா கட்டுப்பாடுகள் குறித்து முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஊரடங்கை நீட்டிப்பது குறித்தும் கூடுதல் கட்டுப்பாடுகள்

விதிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. இதில் தலைமைச் செயலாளர், மருத்துவத் துறை செயலாளர் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளார்கள்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பான அறிவிப்பு தமிழக அரசு சார்பில் வெளியிடப்படும்.

# 10ஆம் வகுப்பு மாணவர்களை விரட்டி கத்தியால் குத்திய மற்றொரு மாணவர் குழு தலைமறைவு

டெல்லியில் 10ம் வகுப்பு மாணவர்கள் 4 பேரை விரட்டி கத்தியால் குத்தி ய மற்றொரு மாணவர் குழு தலைமறைவாகியுள்ள நிலையில் பொலிஸார் தேடுதல் வேட்டையில் இறங்கியிருக்கின்றனர்.

மயூர் விகார் பகுதியில் உள்ள பள்ளியில் தேர்வு எழுதிவிட்டு வெளியே வ ந்த 10-ஆம் வகுப்பு மாணவர்கள் 4 பேரை, மற்றொரு பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் விரட்டித் தாக்கியதாகவும்,

அருகில் இருந்த பூங்காக்குள் ஓட முயன்ற 4 பேரையும் பிடித்து கத்தியால் குத்திவிட்டு தப்பியதாகவும் கூறப்படுகிறது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 3 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட நிலையில் ஒருவர் மேல் சிகிச்சைக்காக எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறி த்து சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்து விசாரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கொவிட்-19 பாதித்த நுரையீரல் செல்களை மலேரியா மருந்தினால் பாதுகாக்க முடியும்!

கொவிட்- 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட நுரையீரல் செல்களை மலேரியாவுக்கான மருந்தினால் பாதுகாக்கமுடியும் என ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்ப ட்டிருப்பதாக கூறப்படுகின்றது. இதுகுறித்து ஆய்வு நடத்திய டென்மார்க்கின் ஆர்கஸ் பல்கலைக்கழக ஆ ய்வாளர்கள், அடோவகுவோன் என்ற மருந்து கொரோனா வைரஸுடன் போராடி நுரையீரல் செல்களை பாதுகாக்கும் என்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மருந்து ஏற்கனவே அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வா கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒமிக்ரான் மாறுபாட்டிற்கு எதிராக அடோவகுவோன் மருந்தின் தாக்கம் உள்ளதா என்பதை ஆராயவும் குழு திட்டமிட்டுள்ளது.

# போராட்டம் முடித்து ஊர் திரும்பிய விவசாயிகளுக்கு உற்சாக வரவேற்பு



இந்திய தலைநகர் டில்லியில் ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ச்சியான போராட்டங்களை நடத்திய விவசாயிகள் போராட்டம் நிறைவுக்கு வந்த நிலையில் போராட்டத்தில் பங்கெடுத்த பஞ்சாப் விவசாயிகள் தமது ஊர்க ளுக்கு திரும்பியிருக்கின்றனர்.

இந்நிலையில் பஞ்சாப் திரும்பிய விவசாயிகளுக்கு இன்று அமர்த சரஸ் கோ விலில் உற்சாகமான வரவேற்பு வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

அங்கு அவர்கள் வழிபாடு செய்து வீடுகளுக்கு செல்கின்றனர். கிராமங்களில் விவசாயிகள் திரும்பி வருவதையெடுத்து விழாக் கோலம் போடப்பட்டுள்ளது.

இனிப்பு லட்டுகளை விநியோகித்து விவசாயிகளுக்கு மாலைகள் அணிவித்து பாங்கரா நடனமாடி ஊர்மக்கள் வரவேற்பு தெரிவித்தனர். போராட்டத்தில் வெற்றி பெற்றதற்காக தேசிய நெடுஞ்சாலைகளில் டிராக்டர்களில் வெற்றிப் பேரணிகளும் நடைபெற்று வருகின்றன.

# குரூப் கப்டன் வருண்சிங் உடல் நிலை பாரியளவில் முன்னேற்றம்



தமிழகம் - குன்னூர் அருகில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் காய மடைந்த குரூப் கப்டன் வருண் சிங்கிற்கு 3 அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளதாகவும், உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் விமா னப் படை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். குன்னூர் அருகே நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிர் தப்பிய ஒரேயொரு வீரரான குரூப் கப்டன் வருண் சிங் பெங்களூர் விமானப் படை மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். 45 சதவீத தீக் காயங்களுடன் உயிர் தப்பிய அவரின் உடல்நிலை தற்போது சீராக உள்ளதாக விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.


## சிறுவிளம்பரம்

**மணமகன் தேவை**

1994, யாழிந்து விஸ்வகுலம், ஹஸ்தம், Teacher, யாழ்ப்பாணம், பதிவு #6650, புதன் கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரி வரும் போது தரகர் கூலி இல்லை. Appointments 076 6649 401. www. EQMarriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., No.91 - 4/2, Galle Road, Bamabalapity, Colombo - 04.



ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-10
வெற்றி வாரம் : 3301
வர்ணம் : நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,794,508/-
வெற்றி இலக்கங்கள் 03 15 22 25
மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,226,580/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1590
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2021.12.11
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் P 06 30 36 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,925,380/-
அபிவிருத்தி லொத்தர் சபை

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1416
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2021.12.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,076,740/-
வெற்றி இலக்கங்கள் 40 42 47 69
ஆங்கில எழுத்து V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-11
வெற்றி வாரம் : 467 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,560,764/-
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 22 42 46
விதி எண் 1
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,815,000/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,675,320/-

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1415
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2021.12.10
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,648,700/-
வெற்றி இலக்கங்கள் 03 08 34 43
ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1589
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2021.12.10
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 52 54 68 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,112,620/-

சசிரி SASIRI
சீட்டிழுப்பு வாரம் 109
சீட்டிழுப்பு திகதி 2021.12.11
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 26 37 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,545,180/-

கோடிபதி கப்ருக
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் Q 10 38 42 56
சீட்டிழுப்பு வாரம் 776
வர்ணம் பச்சை
திகதி 2021. 12. 10
வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,418,940/-
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,991,255/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-11
வெற்றி வாரம் : 3302
வர்ணம் : இள நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,997,811/-
வெற்றி இலக்கங்கள் 14 15 39 47
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,216,800/-

சனிதா Shanida
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.10
சீட்டிழுப்பு இல: 3750
வர்ணம்: செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,000,500/-
வெற்றி இலக்கங்கள் 02 26 49 65
ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.11
சீட்டிழுப்பு இல: 3751
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,718,440/-
வெற்றி இலக்கங்கள் 06 41 44 54
ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# ஆப்கானிஸ்தான் - காபூல் நகரில் பாரிய குண்டுவெடிப்புச் சம்பவம்..!



ஆப்கானிஸ்தான் - காபூலில் இரு இடங்களில் பாரிய குண்டுவெடிப்பு சம்பவ ங்கள் பாதிவாகியுள்ளதுடன், இருவர் கொல்லப்பட்டு 4 பேர் காயமடைந்துள்ளதாக தலிபான் அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

காபூலின் தாஷட்- இ -பார்ச்சி மாவட்டத்தில் மினிபஸ்ஸில் கடந்த வெள்ளி க்கிழமை வெடி குண்டு வெடித்ததில் இரண்டு பொது மக்கள் கொல்லப்ப ட்டதோடு மூன்று பேர் காயமடைந்தனர்

என தலிபான் உள்துறை அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார். இந்த குண்டு வெடிப்பு நடந்த அடுத்த சில நிமிடங்களில் அதே பகுதியில் இடம்பெற்ற மற்றொரு வெடிப்பில் ஒரு பெண் காயமடைந்ததாகவும்

அவர் குறிப்பிட்டுள்ளார். அடுத்தடுத்து நடந்த இந்த இரட்டை குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு ஐ.எஸ்.பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

# கடலுக்குள் சுமார் 3,200 அடியில் படம் பிடிக்கப்பட்ட ஜெல்லி மீன்கள்



மிகவும் அரியவகை பாண்டம் ஜெல்லி மீன்கள் அமெரிக்க கடற்பகுதியில் தென்பட்டிருக்கின்றது. கடந்த 1899ஆம் ஆண்டு பார்க்கப்பட்ட இந்த வகை ஜெல்லி மீன்கள் 33 அடி நீள கால் போன்ற இழைகளுடன் பிரமாண்டமாகக் காட்சியளிக்கும்.

தற்போது கலிபோர்னியாவில் உள்ள மாண்டரே வளைகுடாவின் அதிக ஆழத்தில் படம் பிடிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 200 அடி ஆழத்தில் வலம் வந்த பாண்டம் ஜெல்லி மீனை ரோபோ உதவியுடன் ஆய்வாளர்கள் படம் பிடித்துள்ளனர்.

விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, ராட்சத பாண்டம் ஜெல்லிமீன்கள் ஆர்க்டிக் தவிர அனைத்து கடல்களிலும் இருப்பதாகத் தெரிகிறது.

# ஓமிக்ரோன் மாறுபாடு பிரித்தானியாவில் 633 நோயாளிகள் புதிதாக அடையாளம்!



பிரித்தானியாவில் ஒமிக்ரோன் மாறுபாடுள்ள 633 நோயாளிகள் கடந்த சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அவர்களுடன் சேர்த்து கடந்த 24 மணிநேரத்தில் 54,073 புதிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது. இருப்பினும் ஒமிக்ரோன் மாறுபாடு உறுதியான நோயாளிகளின் உண்மையான எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறு திக்குள் இங்கிலாந்தில் வைரஸின் ஆதிக்க வடிவமாக ஒமிக்ரோன் மாறுபாடு இருக்கும் என வைத்தியர் நிக்டேவிஸ் கூறியுள்ளார். இந்நிலையில் உட்புற, பொது இடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் என்ற பிளான் பி நடவடிக்கைகள் இந்த வாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் திங்கட்கிழமை முதல் முடிந்தவரை வீட்டிலிருந்து வேலை செய்யும்படி மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# கட்டாய தடுப்பூசி திட்டதிற்கு எதிர்ப்பு தெரிவித்து வியன்னாவில் பல்லாயிரக்கணக்கானோர் போராட்டம்

கட்டாய தடுப்பூசி திட்டத்திற்கும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப் பு தெரிவித்தும் ஒஸ்ரியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எதிர்ப்பு போராட் டங்களில் குதித்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

வார இறுதி ஆர்ப்பாட்டங்களின் ஒருபகுதியாக தொடர்ந்து நான்காவது வா ரமாக தலைநகர் வியன்னாவில் சுமார் 44,000 பேர் திரண்டதாக பொலிஸார் கூறுகின்றனர். நாடளாவிய ரீதியில் தடுப்பூசி செலுத்தப்பட்டபோதும் மேற்கு ஐரோப்பிய நாடான ஒஸ்திரியாவில் கடந்த மாதம் மீண்டும் முடக்க கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்த கட்டுப்பாடுகள் நிறைவுக்கு வரும் நிலையில் தடுப்பூசி போடாதவர்களுக்கு கட்டுப்பாடுகள் தொடரும் என்ற அறிவிப்பு வெ ளியாகியுள்ளது. கடந்த பெப்ரவரி முதல் கொரோனா தடுப்பூசியை கட்டாயமாக்குவதற்கான அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக எதிர்கட்சிகளுடன் ஒன்றிணைந்து மக்கள் போராடி வருகின்றனர். தடுப்பூசி போட வேண்டுமா என்பதை தாங்களாகவே தீர்மானிக்கும் சுதந்திரம் மக்களுக்கு இருக்க வேண்டும் என்ற



கோஷத்தை முன்வைத்து போராட்டங்கள் இடம்பெறுகின்றன. எவருக்கும் வலுக்கட்டாயமாக தடுப்பூசி போடப்பட மாட்டாது என அரசாங்கம் கூறினாலும் அதை மறுப்ப வர்களுக்கு 4,000 டொலர் வரை அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச ஒலிம்பிக் கொமிட்டி அலுவலகம் முன் திபெத்திய மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.!





சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச ஒலிம்பிக் கொமிட்டி அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்திய திபெத்திய மாணவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட் டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சீனாவில் நடக்க உள்ள குளிர்கால ஒலி ம்பிக் போட்டியை இரத்து செய்யக் கோரி மாணவர்கள் கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறு பான்மையின மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை சீன அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளதாகவும், அதனால் உலக நாடுகள் குளிர்கால ஒலிம் பிக் போட்டியை புறக்கணிக்க வேண்டும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

# டெனாடோ சூறாவளி காரணமாக 80இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகத் தகவல்..!



அமெரிக்கா - கென்டகி மாநிலத்தில் டெனாடோ சூறாவளியினால் சுமார் 80இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர்.

மாநில வரலாற்றில் மிகவும் மோசமான சூறாவளி இதுவாகும் என மாநில ஆ ளுநர் குறிப்பிட்டுள்ளார். இந்த சூறாவளி காரணமாக,

மாநிலத்தின் பல பாகங்களில், கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதால், மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கென்டகியில் உள்ள மெழுகுவர்த்தி தொழிற்சாலை ஒன்று சூறாவளியால் பாதிப்படைந்துள்ளதாகவும் அங்கு 110 பேர் இருந்ததாகவும் ஆளுநர் ஆண்டி பெஷகர் கூறியுள்ளார். இவர்களில் 40இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சுவதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார். மேஃபீல்டில் உள்ள பொலிஸ் நிலையம் முழுமையாக சேதமடைந்துள்ள அதேவேளை தீயணைப்பு வீரர்களின் உபகரணங்கள் சேதமடைந்துள்ளதாவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# ஜெப் பெசாஸின் ப்ளூ ஆர்ஜின் நிறுவன ரொக்கெட்டில் விண்வெளி சுற்றுப்பயணம்!



விண்வெளி சென்ற முதல் அமெரிக்க வீரரான அலென் செப்பர்ட்டின் மகள் உட்பட 6 பேர் கொண்ட குழு ஜெப் பெசாஸின் ப்ளூ ஆர்ஜின் நிறுவன ராக்கெட்டில் விண்வெளி சுற்றுப் பயணம் மேற்கொண்டது.

மேற்கு டெக்சாசில் உள்ள வான் ஹார்ன் ஏவுதளத்தில் இருந்து கிளம்பிய ராக்கெட்டில் 6 பேர் பயணம் செய்தனர். பூமியில் இருந்து 106 கிலோ மீற்றர் தொலைவில் சுமார் 10 நிமிடங்கள் விண்வெளியில் பயணித்தனர். கார்மன் கோடு அருகில் சில நிமிடங்கள் ஈர்ப்பு விசையை இழந்து மிதந் தனர். தொடர்ந்து விண்கல கேப்சியுல் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.

# துபாயில் திருடப்பட்ட மரோடோனாவின் கைக் கடிகாரம் அசாமில் மீட்கப்பட்டது

கால்பந்து ஜாம்பவான் மறைந்த மரோடோனாவனின் கை கடிகாரம் டுபாயில் திருடப்பட்ட நிலையில் அசாமில் மீட்கப்பட்டிருக்கின்றது. குறித்த கடிகாரம் 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ளதாக கூறப்படுகின்றது.




அர்ஜென்டினாவைச் சேர்ந்த மரோடோனாவின் கைக்கடிகாரம் மற்றும் இதர பொருட்கள் துபாயில் ஒரு தனியார் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் பாதுகா ப்பாக வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அதன் காவலாளியாக பணியாற்றி வந்த வாசித் ஹசைன் அந்த கைக்கடிகாரத்தை திருடிவிட்டு கடந்த ஆகஸ்டில், தனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லை எனக்கூறி இந்தியா திரும்பியுள்ளார்.

இதனை அடுத்து, துபாய் காவல் துறையினர் அளித்த தகவலின் அடிப்படை யில் அசாம் மாநிலம் சிப்சாகர் பகுதியைச் சேர்ந்த வாசித், அம்மாநில பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

# கென்டகி சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவி - ஜோ பைடன்



சூறாவளியினால் பேரழிவை சந்தித்திருக்கும் அமெரிக்காவின் மத்திய பகுதிக ளுக்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்வேன். என அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் கென்டகி, அர்கன்சஸ், இல்லினாய்ஸ் உள்பட சில மாகாணங்களில் சூறாவளி திடீரென தாக்கியதில் ஏராளமான கட்டடங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் உள்ளிட்டவை பெரும் சேதமடைந்துள்ளன.

இந்த சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மிகவும் பாதிக்க ப்பட்ட மாநிலமான கென்டகிக்கு நிதியை விடுவித்து, அவசரகால பேரிடர் பிரகடனத்தில் ஜனாதிபதி ஜோ பைடென் கையெழு த்திட்டுள்ளார். அமெரிக்க வரலாற்றில் மிகப் பெரிய சூறாவளி இது என குறிப்பிட்ட ஜனாதிபதி, இதில் சொந்தங்களை இழந்தவர்களுக்கு அனுதாபங்களை வெளியிட்டார். இதேவேளை அவசர நிதிகள் தேவைப்ப ட்டால் பாதிக்கப்பட்ட மற்ற மாநிலங்களான மிசோரி, ஆர்கன்சாஸ், இல்லி னாய்ஸ், டென்னசி மற்றும் மிசிசிப்பி ஆகிய மாநிலங்களுக்கும் வழங்கப்படும் என கூறினார்.

# இங்கிலாந்தில் பூஸ்டர் தடுப்பூசி பெற முன்பதிவு அவகாசம் இன்று நிறைவு..!



இங்கிலாந்தில் 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர் பூஸ்டர் தடுப் பூசி பெறுவதற்கு முன்பதிவுகளை செய்து கொள்வதற்கான இறுதித் திகதி இ ன்றுடன் நிறைவடைகின்றது.

தடுப்பூசி, ஓமிக்ரோனுக்கு எதிரான இன்றியமையாத பாதுகாப்பு என தரவுகள் காட்டுவதாக சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு செயலாளர் சாஜித் ஜாவிட் கூறியுள்ளார்.

முன்னதாக 2ஆவது டோஸ் செலுத்தி 6 மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டபோதும் தற்போது மூன்று மாதங்க ளுக்குப் பின்னர் செலுத்தலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஓமிக்ரோன் மாறுபாடு ஏப்ரல் இறுதிக்குள் 25,000 முதல் 75,000 இறப்புகளை ஏற்படுத்தக்கூடும் என புதிய ஆராய்ச்சி கூறுகிறது. இந்நிலையில் இன்று திங்கட்கிழமை வரை 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் முன்பதிவு செய்துகொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.